ce: 5.00FF Germany: 2.00DM
ss: 5.00SF Canada: 1.00C$

40p

# வெளி

DECEMBER 97

**வெளியின் உள்ளே...**


- 'தேசியம்' 'தேசம்' (ஒரு வரலாற்று அறிமுகம்)
- தமிழீழ விடுதலைப் போராட்டமும், அமெரிக்காவும்
- சமாதானமும், சமாதான பொதியும்
- பெண் அரசும் பெண்கள் நிலையும்
- குஞ்சரங்கள் (தொடர்கதை)
- 'இனியும் சூல் கொள்' (மலர் விமர்சனம்)


Veli

டிசம்பர் 97 வெளி - 3

# யாழ்ப்பாணத்தில் தேர்தல்


சிவசிதம்பரம்


டக்ளஸ் தேவானந்தா

திரும்பவும் ஒரு பம்மாத்து விடுறாங்கள்



வன்னியில் ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடாத்திக் கொண்டு யாழ்ப்பாணத்தில் தேர்தல் ஏற்பாடுகளைச் சந்திரிகா அரசு செய்து வருகின்றது. யாழ்ப்பாணத்தின் 17 தொகுதி களிலுமிருந்தும் போட்டியிடுவதற்கான வேட்பாளர் பட்டியல்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

வழமைபோல் டக்ளஸ் தேவானந்தா இத்தேர்தலை வர வேற்றிருந்தாலும் புளொட் குழுவினரே முதலில் இத்தேர்தலில் தாம் போட்டியிடுவதாக அறிவித்துள்ளனர். யாழ் மாநகரசபைத் தொகுதியில் புளொட்இன் இராணுவ பொறுப்பாளர் மாணிக்க தாசன் போட்டியிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தேர்தலில் எத்தனை வீதமான மக்கள் வாக்களிப்பர் என்பது கேள்விக்குறியேயானாலும் கூட்டணி (TULF) போட்டியிடும் பட்சத்தில் இளைய சமுதாயத்தின் ஆதரவு இல்லாத போதும் கூட வெல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கிறதென்று செய் திகள் கூறுகின்றன.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் அலுவலகம் திறந்து, காணாமல் போனோர் விபரம் திரட்டி வரும் ஈபிடிபியும் கணி சமான செல்வாக்குச் செலுத்தலாமென்று அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஜெயசிக்குறு மூன்றாவது கட்டம்

இம்மாத ஆரம்பத்தில் தொடங் கப்பட்டுள்ள 'ஜெசிக்குறு' இராணுவ நடவடிக்கை 'ஜெயசிக்குறு'வின் இறுதிக்கட்டமாக இருக்குமென்று நம்பப்படுகிறது.

புளியங்குளத்திற்கு தென்மேற் காக அமைந்துள்ள புதூர்ப் பகுதியி லிருந்து கண்டி - யாழ் வீதி வழியே (A9) புறப்பட்ட இராணுவத்தினர் கடும் இழப்புகளிற்கு நடுவில் கனக ராயன் குளத்தை அண்மித்துள்ள னர். இவ் 53வது படைப்பிரிவானது பிரிகேடியர் வசந்த பெரேராவினால் வழிநடாத்தப்படுகிறது.

மாங்குளம் வரை படைகள் முன் னேற முடியுமாயின் அவர்களது அடுத்த இலக்கு 'ஜெயசிக் குறு' வின் இறுதி இலக்காகிய கிளி நொச்சியை நோக்கிய இராணுவ நகர்வாகவே இருக்குமென்பது வெளிப்படை.

200 நாட்களுக்கு மேலாகத் தொடரும் இச்சமரில் இதுவரை 6 பெரிய எதிர்த்தாக்குதல்கள் புலி களினால் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

**செய் அல்லது செத்துமடி 1**
**ஒக்டோபர் 10**

180 இராணுவத்தினர் கொல் லப்பட்டனர். 27 பேரைக் காணவி ல்லை. 320 பேர் காயம்.

**செய் அல்லது செத்துமடி 2**
**யூன் 24**

ஓமந்தை-75 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 201 பேர் காயம்.

**செய் அல்லது செத்துமடி 3**
**ஒகஸ்ட் 1**

ஓமந்தை, புளியங்குளம்-70 அரச படையினர் கொல்லப்பட்டனர். (பொலீஸ் உட்பட)

**செய் அல்லது செத்துமடி 4**
**செப்ரெம்பர் 30**

கறுப்பைக்குத்தி-48 இராணுவத் தினர் கொல்லப்பட்டனர். 20 பேரைக் காணவில்லை. 308 பேர் காயம்.

**செய் அல்லது செத்துமடி 5**
**ஒக்டோபர் 6**

கறுப்பைமுறிப்பு (ஒட்டுசுட்டான் அருகில்)பெரும்தொகையான ஆயுத ங்கள் புலிகளினால் கைப்பற்றப்பட் டன. 30 இராணுவத்தினர் கொல் லப்பட 42பேர் காயமடைந்தனர்.

**செய் அல்லது செத்துமடி 6**
**டிசெம்பர் 4**

147 இராணுவத்தினர் கொல்லப் பட்டுள்ளதுடன் 22 பேர் காணாமல் போயுள்ளனர். அத்துடன் 396 காயம டைந்த இராணுவத்தினர் அநுராத புரம் வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளனர்.

செய் அல்லது செத்துமடி 6 நட வடிக்கை படைகளின் முன்னேறும் வேகத்தைக் குறைத்திருக்கிது. 7 மாத வயது கொண்ட 'ஜெயசிக்குறு' இலங்கை வரலாற்றிலேயே மிகப் பெரும் இராணுவ நடவடிக்கையா கும். இது மட்டுமல்லாது இது பெரு மளவிலான உயிர்சேதத்தை ஏற்ப டுத்தியுள்ளதுடன் முன்னெப்போ தும் இல்லாதளவிலான பணச்செல வையும் ஏற்படுத்தியுள்ளது.

இதே வேளை 'ரத்வத்தை' போரின் 92வீதம் முடிந்து விட்ட தென்று தெரிவித்திருக்கிறார். இறுதி இலக்கு ஜனவரி 31ம் திக தியளவில் அடையப்படுமென்று அரச வட்டாரங்கள் நம்புகின்றன. கடந்த 6 மாத காலமாக படைகள் 50 கிலோமீற்றரையே கைப்பற்றி யுள்ளன. ஆனால் இன்னும் மீதமி ருக்கும் 24 கிலோமீற்றரையும் ஓரிரு வாரங்களுக்குள் கைப்பற்றுவதென் பது படைகளால் இயலாத காரியமா கவே இருக்கும். அதிலும் இப்போ தைய மழைக்காலநிலை படை நகர் விற்குப் பாதகமான அம்சமாகவே உள்ளது.எவ்வாறாயினும் படைக ளின் இறுதி இலக்கு சிங்கள தேச த்தின் 50வது சுதந்திர தினத்திற்கு முன்பாக அடையப்பட வேண்டு மென்பதே இலங்கை அரசின் நோக் காக உள்ளது.

பிரபாகரனை தோற்கடித்த பின் மட்டுமே தான் அவருடன் கை குலு க்கிக்கொள்வாரென்று ரத்வத்தை சூழுரைத்ததுவும் இதன் தொடர்ச் சியே.

● ESTATE AGENTS ● LETTING MANAGEMENT ● PROPERTY MAINTENANCE

வீடுகளை வாடகைக்கு வழங்குவதில் EAST LONDON, ESSEX பகுதிகளில்
நம்பிக்கை, நாணயம் மிக்க சேவையை வழங்குவதில் முன்னணியில் திகழ்பவர்கள்!

WALTHAMSTOW BRANCH
252, Hoe Street, Walthamstow , London E17 3AX----Tel: 0181 520 9968, Fax: 0181 503 7661

EAST HAM BRANCH
213, High Street,
East Ham, London E6 1JD
Tel: 0181 472 0029, Fax: 0181 503 5996

TILKO PROPERTY SERVICES

ILFORD BRANCH
101 Cranbrook Road
Ilford, Essex IG7 4PD
Tel: 0181-514 1422, Fax: 0181-553 3991

www.padippakam.com



வெளி

மாத இதழ்

டிசம்பர் 1997

Veli
Publications Ltd
P O Box 14936
London N9 0WB
UK

Tel/Fax:
0181-672 8583

# 23வது இலக்கியச் சந்திப்பு நிறைவற்ற தடத்தை நோக்கி

புகலிடச் சூழலில் ஜனநாயகக் கருத்துக்களை அல்லது மாற்றுக் கொள்கைகளை மனித இருத்தல்களுக்காக வாதிட்டு வருபவர்களுக்கு இந்த சந்திப்பு ஒரு பாலமாக, களமாக இருக்குமென்று நாம் முன்னர் நம்பினோம். ஆரம்பகாலத்திலிருந்து இச்சந்திப்பை நாம் ஒருவித பார்வையோடு நோக்கியதன் விளைவால் அப்படி நம்பினோம். இப்போது அ.்.து ஆரோக்கியமற்ற பார்வைக்குள் முடங்கிவிடுகிறது. யாராவது மாற்றுக் கருத்துச் சொன்னால் அ.்.து தேசிய விடுதலை, தேசியம், தமிழ் இன ஒடுக்க முறைபற்றிப் பேசினால் உடனே ஒரு போடு. இவன் புலி: பாசிஸ்டு.

இந்த கூக்குரலோடு கடந்த 13-14.09.97ல் பிரான்சில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்புக்கு ஒரு விசேட இயல்பிருக்கக் கண்டேன்.

வழமையான சுய அறிமுகத்திற்குப்பின் 'ழ' கரம் சஞ்சிகை விமர்சனத்தை நான் செய்தேன். அதன் விமர்சனத்தில் தேசிய விடுதலைக் கேற்றவாறு இலக்கிய கேள்விகளை எடுத்து வைத்தல் இயல்பானதாக இருந்தது. எடுத்து வைத்தேன். வந்தது வினை. துப்பாக்கியோடு வந்து விட்டான் சிறீரங்கன் என்றார் என் அன்புக்குரிய ஒரு நண்பர். இன்னும் சிலர் 'அங்கிருந்து காவி வந்து இங்கு விற்றீர். இங்கிருந்து காவிப்போய் அங்கு வில்லும்' என உரைத்தார்கள்.

என்னுரைக்குப் பின் 'அம்மா' சஞ்சிகையை திரு. ரஜீன்குமார் என்னவோ செய்தார். பின்பு அம்மா ஆசிரியர் முத்தாய் விளக்கமளித்து நியாயத்தை நிலைநாட்டினார்.

இப்படியே சின்னச்சின்ன ரகளைகள் 'கிழக்கும் மேற்கை'யும் திரு.சுசீந்திரன் விமர்சிக்க எல்லோரும் இது காழ்ப்புணர்வால் அறுக்கும் துரோகமென முணுமுணுத்தார்கள்.

யமுனா ராஜேந்திரனின் பார்த்திபன் பற்றிய கட்டுரை விவாதம் வெறும் உணர்ச்சி வசமான ஒரு சலிப்புத்தட்டும் பார்வையாகப் போய் விட்டது. இது இலக்கியச் சந்திப்பிலும் பிரதிபலித்தது.

ஜெயபாலன் 'சமூகவியல் பார்வை' என்று எதையாவது செய்வார். பின்பு அதில் எல்லாமிருக்கும். ஆனால் சமூகவியல் பார்வை மட்டும் அவர் கட்டுக்கடங்காமல் ஓடி ஒளித்துவிடும். அது இங்கும் நடந்தது. நாவலனின் (முன்னாள் சமர் ஆசிரியர்களில் ஒருவர்) 'தேசிய விடுதலைப் போராட்டம்' பற்றிய பார்வை லெனினின் தேசம் நூலின் வாய்பாட்டை நினைவுபடுத்தியது. அதற்கு மேல் தேசிய அலகுகள் குறித்த சுயாதீனமான இயக்கப்பாடுகள் குறித்த பார்வை அவரிடம் வறுமையாக இருந்தது. அரவிந் அப்பாத்துரையின் 'தலித் அரங்கியல்' பற்றி விவரணத் தொகுப்பு பிரயோசன மிக்க விவரிப்பாகவிருந்தது. ஆனால் சுகன் கூறும் தலித்தியம், தலித்துக்கள், விளிம்புநிலை மக்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட நம்நாட்டு மக்களுக்கு புரியுமோ-உதவுமோ அவருக்குத் தான் வெளிச்சம்.

நா.கண்ணனின் 'கணிப்பொறி இணையம்' பற்றிய உரை மிக முக்கியமான உரை. ரொம்ப நன்றாக செய்தார். பயன்மிக்கது.

திரு.மு.நித்தியானந்தன் அவர்கள் 'இனியும் சூல்கொள்' இலக்கியச் சந்திப்பு மலரை தனக்கே உரிய சிறப்பான நாவாற்றலோடு விமர்சித்தார். இவரின் உரை என்றும், 'எதையும் தாங்கும் இதயம்' போல் நட்பாக நடைபெறுவது வழக்கம். இங்கும் அப்படியே.

சிவானந்தன், சியாம் செல்வத்துரை போன்றவர்களின் ஆங்கில நாவல்களை மல்லிகாவும் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியமும் விமர் சித்தார்கள். ஏதேதோ கூறினார்கள். இறுதியில் சியாம் செல்வத்துரை சிறப்பான கதைகளின் பிதாமகனாக முடிசூட்டப்பட்டார்.

டி.சிவராம் அவர்களின் உரை இன்றைய நாட்டு நடப்பை அப்படியே செய்தியாகக் கோர்வைப்படுத்திச் சென்றது. சில உண்மைகள் கிளர்ந்தெழுந்தன.

சிங்கள நாவல் மொழிபெயர்ப்பாளச் சகோதரர் ஒருவர் சிங்கள இலக்கியங்களுக்கூடாக மேலை இலக்கியங்களை விமர்சித்து உரை செய்தார். ரொம்பவும் சிறப்புமிக்க உரையாக அது இருந்தது. ஆனால் தேசிய விடுதலை போர் குறித்தோ, சிங்கள அரச பயங்கரவாதம் குறித்தோ டி.சிவராம் நீங்கலாக யாரும் வாய்திறக்கவில்லை. மொத்தத்தில் நம்பிக்கை தரும்படி எதுவும் அமையவில்லை. முதல் சந்திப்பில் எப்படி நடந்தோமோ அதே நிலைதான். இலக்கியச் சந்திப்பு + உரையாடல் = முசுப்பாத்தி டோய்!

ப.வி.சிறீரங்கன்

வாசகர்களிடமிருந்து
விமர்சனங்களையும்
படைப்புகளையும்
எதிர்பார்க்கின்றோம்.
அனுப்பவேண்டிய முகவரி:
VELI
P.O. Box 14936
London N9 OWB
UK

## ஒரு நண்பியின் (திருமணத்தில்) வாழ்த்து



பெண்ணே!
மரபும் மனமும்
புதுக்கப்பூக்க
மானுடம் எங்கும்
விரிக உன் கைகள்

எண்ணக் கருவெடுத்து
எழுத்தின் துணை கொண்டு
ஏட்டில் வடித்தெடுத்த
வண்ணச் சிலையெல்லாம்
துள்ளிக் குதித்தெழுந்து
செல்ல முத்தம் தாராதோ

மையினில் ஊறிய
நின் வளைக்கரங்கள்
இசைக் கரமிணைத்து
கலைச்சுரம் படிக்க
காதல் சுனைபுகுந்தும்...
ஈரமுலர்த்தி
இலக்கியச் சிறகசைத்து
மெள்ளத் தளைநீவி
அடுக்களைக்கு அப்பாலும்
உன் உள்ளப்
பெண்ணுரிமைக் கவிமொட்டு
மெல்லிதழை விரிக்கட்டும்

S ரகுபதி

RADIO ASIA CANADA

INTERNATIONAL TAMIL SERVICE

சர்வதேச தமிழ் ஒலிபரப்பு

ஐரோப்பிய, ஆசிய, அவுஸ்திரேலிய நாடெங்கும் 24 மணி நேரமும் ஒலிக்கும் தமிழ்!

Astra Satellite Video Chanel -7 11.303 MHz
POLARISATION-H (Horizontal), Audio Frequency 7.38 MHz
www.radioasiacanada.ca REAL AUDIO




முற்றிலும் இலகுவாகவும், இலவசமாகவும் கேளுங்கள்.
உலகெங்கும் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும்,
வாழ்த்துக்கள், அறிவித்தல்கள், பரந்துவாழும் உங்கள்
உறவினர்கள், நண்பர்களை உடனுக்குடன் சென்றடையவும்
தயங்காமல் எம்மை நாடுங்கள்.

விளம்பரங்கள்,
வாழ்த்துக்கள்,
அறிவித்தல்கள்,
நிகழ்ச்சிகள்,
உங்கள் கருத்துக்கள்
ஆகிய அனைத்துக்கும்

S VIJAYAN
TEL: 0181-571 9282
OR 0956 396354
FAX: 0181-571 9282
(24 மணிநேரமும் உங்கள் தகவல்கள் பதிவுசெய்யப்படும்)





தலைமையக முகவரி:
RADIO ASIA CANADA 1- 680 PROGESS AVE. SCARBOROUGH, ONTARIO, MIH 3A5 CANADA
TEL: 00 1 416 289 1522 FAX: 00 1 416 289 1840

படிப்பகம்

www.padippakam.com



# 'வெளி' யில் இருந்து...







அன்பான வாசக உள்ளங்களே,
'வெளி'யின் மூன்றாவது இதழில் காலடி எடுத்து வைத்திருக்கிறோம். இதில் பெற்றுக் கொண்ட படிப்பினைகளை படிக்கட்டுக்களாக்கி மேலும் முன்னேற வெளி உறுதி பூண்டுள்ளது. 97ன் இந்த இறுதி மாதத்தில் இரண்டு உயிர்களின் அழிப்பு நினைவு கூரப்படவேண்டியது. ஒன்று 'ஈழமுரசு' ஆசிரியர் கஜன் அவர்கள், மற்றது நான்கு ஆண்டுகளுக்கு முன் கொலை செய்யப்பட்ட சபாலிங்கம். இரண்டுமே படுகொலைகளுக்கு பேர் போன பாரிஸ் நகரில் இடம்பெற்றவை. அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் பத்திரிகைத் துறையிலும், இலக்கியத்துறையிலும் இருவரது பங்களிப்புகளுக்காக நினைவு கூரப்பட வேண்டியவர்கள். கஜன் அவர்கள் விடுதலைப்புலிகளின் பிரான்ஸ் கிளையின் நீண்டகால உறுப்பினர். புலம்பெயர்ந்த சூழலில் ஒரு தரமான வெகுஜன பத்திரிகையின் ஆசிரியர் ஸ்தாபகர். கஜன் ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் ஜனநாயகத்தன்மை கொண்டவரும், தான் சார்ந்த அமைப்பின் அரசியலுக்கு அப்பால் சென்று விரிந்த தளத்திலும் செயல்பட்டவர். தனது இயக்கத்தின் அரசியலுடன் உடன்படாதவர்களை கூட மதித்து நடக்க கூடியவர். தம்முடன் உடன்பாடு காணமுடியாத நபர்களிடம் சென்று அவர்களின் ஆற்றல்களை பொதுவான நோக்கில் பயன்பெற பாடுபட்டவர். அத்தகைய செயலில் வெற்றியும் ஈட்டியவர். இதனால் பலரது மனங்களை வென்றவர் என அவரை நன்கு அறிந்த, அவருடன் பழகியவர்கள் எழுதுகிறார்கள். அத்தகையவரின் இழப்பு என்பது தமிழ் பத்திரிகைத் துறைக்கும், தமிழ் கூறும் நல்லுலகத்துக்கும் உண்மையில் ஒரு பேரிழப்புதான். ஒரு பத்திரியாளனுக்குரிய முன்னுதாரணமாக திகழ்ந்த கஜனுக்கு 'வெளி'யும் தனது ஓராண்டு அஞ்சலியை தெரிவிக்கிறது.

மற்றுமோர் பேரிழப்பு திரு.சபாலிங்கம் அவர்கள். இவர் தமிழீழ விடுதலைப் போரா ட்டத்தின் ஆரம்பகால பங்காளியும், தமிழ் இலக்கியத்துறையின் முக்கியமான பங்காளியும் ஆவார். புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களின் மத்தியில் இருக்கும் படைப்பாளிகளையும் பத்திரிகையாளர்களையும் ஊக்குவிப்பதற்காக 'ஆசியா' என்ற பதிப்பகத்தை தொடங்கி அதன் மூலம் தமிழில் முக்கியமான சில வெளியீடுகளை கொண்டுவந்தவர். இவர் எழுத்து துறையில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும் அதன் பிறப்புக்கு உந்து வசையாய் இருந்தவர். எழுதுபவன் தான் இலக்கியவாதி என்று சொல்ல முடியாது. எழுதாமலே இலக்கியவாதிகளாக திகழ்பவர்களும் உண்டு. அத்தகையவர்களில் ஒருவர் திரு சபாலிங்கம் அவர்கள். அது மட்டுமல்லாமல் தனக்கென ஒரு சமூக நோக்கும், அரசியல் சிந்தனையும் கொண்டவர். அந்த வகையில் சபாலிங்கத்தின் இழப்பும் நினைவு கூரப்படவேண்டிய ஒன்றே. சபாலிங்கத்தின் மரணமும் மர்மமாகவே இருக்கிறது. இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை இரண்டுமே உரிமை கோரப்படாத படுகொலைகள். வருத்தம் என்னவென்றால் இரு கொலைகளும் அந்த மனிதர்களின் செயல்பாட்டை நிறுத்துவதற்காய், அவர் தாம் கொண்ட அரசியலுக்காய் நிகழ்த்தப்பட்டிருக்கும் என்பது தான் இங்கு ஒரு உண்மை நம்மை நெஞ்சை நிமிர வைக்கிறது. சிலவேளைகளில் பேனாவைக்கண்டு துப்பாக்கி பயப்படுகிறது. அதனால் முந்திக் கொள்கிறது.

●●●

சொறி சிரங்கு வந்தவனும் துப்பாக்கி வைத்திருப்பவனும் சும்மா இரான் என்பது சொல்லடை. அது போல் ஆகிவிட்டது இன்றைய உலக நிலவரம். ஒரு புறம் பயங்கர ஆயுதங்களையும், இரசாயன நச்சு மருந்துகளையும் உற்பத்தி செய்து பின்வழியாக சர்வாதிகார அரசுகளுக்கு விற்கும் வல்லரசுகள், பின்பு பயங்கர ஆயுதங்களை வைத்திருப்பதாக காரணம் காட்டி சண்டைக்கிழுக்கின்றன. சமீபத்திய அமெரிக்க - ஈராக் பிரச்சனை இதைத்தான் தெளிவுபடுத்துகிறது. தட்டிக் கேட்க ஆள் இல்லாத நிலை அமெரிக்காவை சண்டப்பிரசண்டம் பண்ண வைக்கிறது. இஸ்லாமிய அடிப்படை வாதத்தையும், அந்நாடுகளின் இராணுவ, அணுதொழில் நுட்ப வளர்ச்சியையும் காட்டி ஈராக், ஈரான் போன்ற நாடுகளை யுத்தத்துக்கு இருக்கிறது. இதன் மூலம் அந்நாட்டு மக்கள் தமது சர்வாதிகார அரசுகளுக்கு எதிராக கிளர்ந்தெழும்பாமல் சர்வாதிகாரிகளை மேலும் ஆதரிக்கப் பண்ணுகிறது. ஈரான் அமெரிக்க அரசுகள் அணுஆயுதப் பரிசோதனையை தங்கு தடையின்றி நடாத்திக் கொண்டு இந்தியா போன்ற நாடுகளை அணுஆயுத தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடக் கோருகின்றன. யுத்த மிரட்டல்களுக்கு அடிபணிய மறுக்கும் நாடுகளை பொருளாதார தடை போட்டு மிரட்டுகிறது அமெரிக்கா. அடக்கு முறையால் அடிபணிய வைக்கமுடியாத ஆதிக்க வாதிகள் இறுதியில் கையில் எடுக்கும் கொடிய ஆயுதம் 'பொருளாதாரதத் தடை ஆயுதம்' இது சிறிலங்காவின் பேரினவாத ஆட்சியாளர்களில் இருந்து அமெரிக்க வல்லரசு வரை பொருந்தும். ஆயுதத்தின் கொடூரத்தை விட இது ஒன்றும் குறைந்து இல்லை. எனவே 'பொருளாதாரத் தடைக்கு' தடை என ஒப்பந்தம் போட வேண்டும். இது நடக்கிற காரியமா? யுத்தங்களை நிறுத்தமுடியுமா? இவை நடக்குதோ இல்லையோ? சொறி சிரங்கு வந்தவனைபோல் இருக்கும் யுத்த வெறியர்கள் சும்மா இருப்பார்களா?

மீண்டும் அடுத்த வெளியில் சந்திப்போம்.
ஆ - குழு

# இந்தியாவும் தீர்வு யோசனையும்

உத்தேசத் தீர்வு யோசனையில் முஸ்லிம் மக்களுக்கு என அலகு ஒதுக்குவதையிட்டு இந்தியா கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளதாக கொழும்பில் இருக்கும் இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இத்தகவலை சிங்கள வாரப்பத்திரிகைகளும் (தலைப்புச் செய்தியாகக் கூட) செய்தியாக வெளியிட்டிருந்தன.

அரசு தீர்வுத்திட்டத்தை முன் வைத்ததிலிருந்து அதற்கு ஆதரவாக கருத்து தெரிவித்தும் உற்சாகப்படுத்தியும் வந்த இந்தியா இப்படி திடீரென எதிர்ப்பு தெரிவித்திருப்பதைக்கண்டு இலங்கை அரசு திடுக்கிட்டுள்ளது.

இலங்கை அரசு முன்வைத்துள்ள அரைகுறை தீர்வால் இந்தியாவின் நலனுக்கு பாதகமில்லை. குறைந்தபட்சம் இந்தியாவில் நிலவும் "அரைகுறை சமஷ்டி" கூட அற்ற ஒரு முறைமையே இலங்கையில் இருப்பதையே இந்தியா விரும்பி வந்தது. இலங்கை அரசு தமிழ் மக்களிடம் திணிக்க முயலும் எந்த அதிகாரமும் இல்லாத ஓட்டைத் தீர்வை எப்படியேனும் அமுல் படுத்திவிட இந்தியா முயன்று வந்தது. ஆனாலும் இறுதியாக (ஒக்டோபரில்) அரசு வெளியிட்டிருக்கின்ற தீர்வு யோசனையில் முஸ்ஸிம்களுக்கான அலகு குறித்த விடயமும் பேசப்பட்டிருப்பதால் இந்தியா அது குறித்து எச்சரிக்கையடைந்திருக்கிறது.

இந்தியாவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் காஷ்மீரில் முன்னெடுக்கப்பட்டுவரும் சுயநிர்ணய உரிமை பேராட்டத்தை இந்தியப்படை நசுக்கி வருவது நாமறிந்ததே. அது மட்டுமன்றி பஞ்சாப், மிசோராம் உட்பட பல மாநிலங்களில் போராட்டங்களை நடத்திவரும் இனக்குழுமங்களின் கோரிக்கைகளுக்கு இலங்கையின் வழிமுறை ஒரு முன்னுதாரணமாக ஆகிவிடக்கூடாது என்பதில் இந்தியா கவனமாக இருக்கிறது. அதன் நிமித்தமே இன்றைய தீர்வு யோசனை இந்தியாவால் எதிர்க்கப்பட்டு வருகிறது.

அண்மையில் ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்திய பிரதமர் குஜ்ராலின் அழைப்பின் பேரில் இந்தியாவுக்கு விஜயம் செய்து பிரதமர் உள்ளிட்ட பல தலைவர்களை சந்தித்து பேசிவிட்டு வந்ததை நாமறிவோம். ரணில் இலங்கை வந்தவுடனேயே ஒற்றையாட்சித் தன்மையைப் பாதிக்காத தீர்வையே ஐ.தே.க. ஆதரிக்கும் என்று தெரிவித்திருந்தார். வேறு சில இடங்களில் முஸ்லிம் பிராந்தியத்தை தமது கட்சி ஏற்கப்போவதில்லையென்று தெரிவித்திருந்தார். அது மட்டுமன்றி ஒக்டோபர் 24ஆம் திகதி பாராளுமன்றத்தில் தீர்வு யோசனையின் நகலை வெள்ளையறிக்கையாக அரசாங்கம் சமர்ப்பித்த வேளை அதனை ஐ.தே.க.வினர் கடுமையாக எதிர்த்து தோற்கடித்தனர். அது மட்டுமன்றி மூன்று வருடங்களாக இழுத்தடிக்கப்பட்டு முன் வைக்கப்பட்ட அந்த தீர்வு யோசனையை பரிசீலனை செய்ய தமது கட்சிக்கு மேலும் 6 மாதங்கள் தேவையென கேட்டிருந்தது. இந்த போக்குக்கும் ரணிலின் இந்திய



குஜ்ரால்

விஜயத்துக்குமிடையில் எந்தவிதத் தொடர்புமில்லாமலில்லை.

இப்படியான எதிர்ப்பைக் காட்டுவதாயின் தமிழ் மக்களின் போராட்டம் குறித்து என்ன நிலைப்பாட்டில் இருக்கும் என்பதை சொல்லித் தெரியத்தான் வேண்டுமா? இந்தியா இந்தியாவின் நலனில் இருக்கட்டும் தமிழ் மக்களின் போராட்டம் தமிழ் மக்களின் நலனில் இருக்கட்டும்.

படிப்பகம்

www.padippakam.com



& M CO

# MARKANDAN & CO

## SOLICITORS

Empowered to Administer Oaths

Tamil House, 720 Romford Road, Manor Park, London E12 6BT

ALL ASPECTS OF IMMIGRATION MATTERS TO APPEALS
TO EUROPEAN COURT OF HUMAN RIGHTS

ALL TYPES OF CONVEYANCING
LITIGATION
ALL COURTS CIVIL/CRIMINAL
LANDLORDS/TENANT MATTERS
MATRIMONIAL
POLICE STATION ADVICE
ALL D.S.S AND HOUSING BENEFIT MATTERS
FREE ADVICE FOR 15 MINUTES ON THE FIRST ATTENDANCE

LEGAL AID

WE ARE ALWAYS FRIENDLY, EASY TO TALK AND KEEN TO HELP

M.MARKANDAN
TEL: 0181 514 8188
FAX: 0181 514 8303




படிப்பகம்

www.padippakam.com



# வெளிநாட்டவரும் பிரிட்டனும்

ராஜன்

'வெளிநாட்டவர்' என்ற சொல் பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கும் நிலைக்குப் பரிணமித்து வருகிறது. பிரிட்டனில் 56வீதமான வெள்ளையர்கள் இங்கு மிதமிஞ்சிய ஆசியர்கள் வாழ்கிறார்கள் என்றும், மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானோர் இங்கு மிதமிஞ்சிய ஆபிரிக்கர்கள் வாழ்கிறார்கள் என்றும் கருதுவதாக அண்மைய கருத்தெடுப்பு கணிக்கிறது. சில அரசியல்வாதிகள் இவற்றுக்கு தூபமிடுவது போல் 'நாடு நிரம்பி விட்டது' எனக் கூச்சலிடுகின்றனர்.

16ற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்ட வெள்ளையர்களிடம் எடுக்கப்பட்ட 'M' TV கருத்தெடுப்பு 29 வீதமான இளைஞர்கள் ஏதோவொரு விதத்தில் இனவாதச் செயல்களில் ஈடுபட்டடுள்ளதாகக் கூறுகின்றது. இன்று வெள்ளையர்கள் கூடுமிடங்களில் (மதுசாலைகளில்) வெளிநாட்டவருக்கெதிரான கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன. இவை எந்தளவிற்கு உண்மையானவை என்பதைப் பார்ப்போம்.

**1. "வெளிநாட்டவர் இங்கு வந்து குவிவதுடன் இந்நாட்டின் தொழில்களையும் ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள்."**

உண்மையில் வெளிநாட்டவர் வருகை இங்கு வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 30 வருடங்களில் இந்நாட்டுக்கு வந்தோரின் தொகையைவிட இந்நாட்டிலிருந்து வெளியேறியோரின் தொகை 7,00,000 அதிகமாகவுள்ளது. ஆனாலும் இந்நாட்டுக்கு வரும் வெளிநாட்டவர்கள் கடந்த 30 ஆண்டுகளில் எவ்வளவாகப் பெருகியிருப்பார்கள் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமே.

அடுத்ததாக வேலை விடயத்தில், வெளிநாட்டவர்கள் பெரும்பாலும் இந்நாட்டவரால் கைவிடப்பட்ட வேலைகளையே செய்து வருகின்றனர். அதிலும் பலர் தமக்குரிய தொழிலைத் தாமே உருவாக்கிக் கொள்கின்றனர். இதன் மூலம் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுவதுடன் இந்நாட்டு மக்கள் கூட வேலை வாய்ப்பைப் பெறமுடிகிறது.

பிரிட்டனில் அரைவாசிக்கும் மேற்பட்ட சிறுகடைகள் (நியூஸ் ஏஜென்ஸ், குரோசறி) ஆசியர்களினாலேயே நடாத்தப்படுகின்றன. இவர்கள் நாளுக்கு 15 மணி நேரங்களுக்கு மேல் உழைக்கிறார்கள். மக்கள் தமது வீட்டுக்கருகாமையில் வேண்டியவற்றைப் பெறமுடிகிறது.

வெளிநாட்டவர்களால் சிறு தொழிலாக ஆரம்பிக்கப்படும் பல நிறுவனங்கள் பெரியளவில் வளர்ந்து நாட்டின் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்யும் உதாரணங்களைப் பார்க்கும் போது அவர்களின் வருகையின் சாதகமான அம்சங்கள் புலனாகின்றன.

**2. வெளிநாட்டவர்கள் இந்நாட்டின் நலன்புரித் திட்டடங்களின் பலன்களை உறிஞ்சிக் கொள்கின்றனர்.**

வெள்ளையரை விட வெள்ளையரல்லாதவர் அரச பணவுதவி (Dole) பெறுவது அதிகம் என்பது உண்மையே. ஆனாலும் இந்நாட்டிற்குத் திடீரென வரும் ஒரு வெளிநாட்டவர் தன்னை உடனடியாக ஸ்திரப்படுத்திக் கொள்ள முடியாத நிலையிலிருக்கிறார். மொழி வறுமையும், நிறமும் அனுபவமின்மையும் அவரைப் பல வேலைத் தலங்கள் நிராகரிக்கக் காரணமாய் அமைகிறது.

வெளிநாட்டவர் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் வரை இவ்வாறான உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை அதிகமாகவுள்ளது. குறிப்பாக எந்தவிதமான தயாரிப்புகளும் இல்லாமல் ஓடிவரும் அகதியைக் கூறலாம். அவர்கள் தம்மை நிலைப்படுத்திக் கொண்டதும் நாட்டின் பொருளாதார விருத்திகளில் பங்களிப்புச் செய்கின்றனர். பிரிட்டனிலுள்ள 10,000 ஆசிய உணவகங்களில் (Curry House) மட்டும் 70,000 பேர் வேலை செய்வதுடன் அது 500 மில்லியன் பவுண் வருவாயையும் கொடுக்கிறது.

**3. வெள்ளையரல்லாதோர் (ஆபிரிக்கர்) அதிக குற்றம் புரிகின்றனர்.**

லண்டன் பொலிசின் கணிப்புப்படி கறுப்பர்களே அதிகமான வழிப்பறிகளைச் செய்து வருகின்றனர். இது முற்றிலும் உண்மையே. 80 வீதமான வழிப்பறிகள் கறுப்பர்களாலேயே நடாத்தப்பட்டிருக்கின்றன.

ஒரு நாட்டில் வழிப்பறிகள், நகரத்தின் வறிய பகுதிகளிலுள்ள உதிரி இளைஞர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இந்த உதிரி வகையினனாக லண்டனில் கறுப்பின இளைஞனே பெரிதும் இருக்கின்றான். இதுவே கிளாஸ்கோ, சண்டலாண்ட் ஆக இருந்தால் இவ்வகைக்குள் அடங்குபவர்கள் பெரும்பாலும் வெள்ளை இளைஞர்களாக இருப்பர். இவ்விடயம் அவ்வாறே அணுகப்பட வேண்டுமென்பது மிடில்ஸ்செக்ஸ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரின் கருத்து.

கறுப்பர்களையும் வெள்ளையர்களையும் விட ஆசியர்கள் குற்றச் செயல்கள் புரிவது மிகவும் குறைவாகவே உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. கல்வி விடயத்தில் கறுப்பர்களும் ஆசியர்களும் வெள்ளையரை விட அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

**4. வெளிநாட்டவர் வெள்ளையருடன் கலப்பதில்லை**

வெளிநாட்டவர் குறிப்பாக ஆசியர்கள் தமக்குள் ஒரு வட்டத்தை உருவாக்கி அதற்குள் வாழ விழைவது உண்மையே. இதற்கு அவர்களது கலாச்சார அம்சங்களும் கூட்டாக வாழும் (வேலைத்தளங்களை அண்டி) பௌதிக நிலையும் துணை போகின்றன. ஆனாலும் காலப்போக்கில் இந்த நிலை மாற்றமடைமந்து வருகிறது. கூட்டாக (வேலைக்காக) Manchester போன்ற இடங்களில் குடியேறிய பாகிஸ்தானியர் தாம் விரும்பிய இடங்களுக்கு நகரத் தொடங்கிவிட்டனர். ஆசியர்களின் பிள்ளைகள் கலாச்சார ரீதியாக ஐரோப்பிய அம்சங்களையும் தம்மகத்தே சுவீகரிக்கத் தொடங்கியுள்ளனர்.

நீண்டகாலம் இந்நாட்டில் வாழும் ஒருவர் தன்னை பிரிட்டிஷ் பிரஜையாக அடையாளங் காணத் தொடங்குகிறார். பிரித்தானியாவைத் தனது இரண்டாம் நாடு என்று உணர்வுபூர்வமாக நம்பும் பலரை நாம் காண்கிறோம்.

இனங்களின் கலப்பானது தவிர்க்க முடியாத வரலாற்று நிகழ்வாக அமைகிறது. இங்கு தமிழர்களாகிய நாம் எந்த விதத்தில் இதைப் புரிந்து கொள்ளப்போகிறோம். எமது இளைய சந்ததியினரின் தேவைகளைப் புரிந்து எப்படியான விட்டுக் கொடுப்புகளையும் கருத்துப் பரிமாற்றங்களையும் செய்யப் போகிறோம் என்பது இன்னும் விடை காண முடியாத விவாதமாகவே உள்ளது. ●



# அமெரிக்க பயங்கரவாதம்



அண்மையில் அமெரிக்கா தனது பயங்கரவாதப் பட்டியலில் புலிகள் இயக்கத்தையும் சேர்த்துக்கொண்டதுடன் அவ்வியக்கங்களை தடை செய்தது.

அமெரிக்கா இன்று சர்வதேச அளவில் செய்துவரும் சண்டித்தனங்களை பயங்கரவாதம் என்று சொல்ல அமெரிக்காவைவிட சக்தி வாய்ந்த எந்தநாடுமே இல்லை. எனவே உலகின் ஏகபோக சண்டியனான அமெரிக்காவின் பயங்கரவாதத்தையோ அதன் பிரகடனத்தையோ எதிர்த்து எவரும் பேசப் போவதில்லை.

ஐ.நா.சமாதானப் படை என்ற போர்வையில் அமெரிக்கப்படைகள் பொஸ்னியா, ஈராக்கிலும் உள்ளிட்ட பல நாடுகளில் செய்த அக்கிரமங்களை பயங்கரவாதமென கூற எவருளர்.

இன்று 30விடுதலை இயக்கங்களையும் பயங்கரவாத இயக்கமென அமெரிக்கா கூறிவிடுவதால் அவை பயங்கரவாத இயக்கங்களாகிவிடப் போவதுமில்லை. அமெரிக்கா பயங்கரவாதி இல்லையென்றாகிவிடப் போவதுமில்லை. அமெரிக்காவின் இச்செயல் அமெரிக்காவின் பயங்கரவாதத்தை மேலும் நிரூபித்துள்ளது.

அமெரிக்க பயங்கரவாதத்துக்கு இன்னமும் முகம் கொடுத்துக் கொண்டும், சவாலாகவும் இருந்து வரும் கியூபாவுக்கும் பிடல் காஸ்ரோவுக்கும் எதிராக தொடர்ந்தும் அமெரிக்கா கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இன்று புலிகள் இயக்கமும் நாட்டின் உல்லாச ஹோட்டல்களை அதன் தாக்குதல் இலக்காகக் கொண்டு வருகிறது. இதனை அமெரிக்கா பல தடவைகள் கண்டித்தும் வந்திருக்கிறது. ஆனால் கியூபாவில் இவ்வாறான நடவடிக்கைகள் நெடுங்காலமாகவே இடம்பெற்று வருகின்றன. கியூபாவில் உல்லாசப்பிரயாணத்துறையை அபிவிருத்தி செய்ய முயன்றதிலிருந்தே(1990) அங்குள்ள உல்லாச ஹோட்டல்களில் அமெரிக்காவின் வழிகாட்டல்கள் மூலம் குண்டு வெடிப்புகள் இடம்பெற்று வருகின்றன.

சோவியத் யூனியனின் வீழ்ச்சியும் கியூபாவின் மீதான பொருளாதாரத் தடையும் கியூபாவை பாதிக்காமல் இருப்பதற்கென கியூபா மேற்கொண்ட முயற்சிகளில் ஒன்றே உல்லாசப் பிரயாணத்துறையில் கவனம் செலுத்துதல் என்பது.

கியூபாவுக்கு வருமானத்தைத் தேடித்தந்து கொண்டிருந்த சீனி உற்பத்தியின் மூலம் கிடைக்கும் வருமானத்தை விட இன்று உல்லாசப் பிரயாணத்துறை முன்னிலைக்கு வருமளவுக்கு கவனம் செலுத்தப்பட்டிருந்தது. கடந்த செப்டெம்பர் மாதம் கியூபாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த உல்லாசப் பிரயாணி ஒருவரும் கொல்லப்பட்டார்.

இவ்வாறான குண்டு வெடிப்புகளுக்கு அமெரிக்காவில் புளோரிடா, மயாமி போன்ற பிரதேசங்களிலுள்ள கியூப விரோத கும்பல்களை அமெரிக்கா ஈடுபடுத்தி வருவது உலகமறிந்த இரகசியம். 1976இல் கியூப விமானமொன்றுக்கு வைத்த குண்டொன்று வெடித்ததில் 76பேர் கொல்லப்பட்டனர். இன்றும் அக்கொலைகாரர்கள் அமெரிக்காவின் அரவணைப்பிலேயே உள்ளனர்.

காஸ்ரோ விரோதக் கும்பல்களுடன் அமெரிக்க உளவுப் பிரிவான சீ.ஐ.ஏ. நிறுவனம் நெருங்கிய தொடர்புகொண்டிருக்கிறது. உல்லாச ஹோட்டல்களில் நடத்தப்பட்டுவந்த குண்டுவெடிப்புகளின் சூத்திரதாரியான அர்னஸ்டோ குருஸ்லியோர் எனும் (சல்வடோர் நாட்டுப் பிரஜை) ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரின் தகவலின்படி தனக்கு பயிற்சிகள் அனைத்தையும் வழங்கியது சீ.ஐ.ஏ. என்பதே.

இத்தனையை மீறி இன்று பிடல் காஸ்ரோ ஒரு "பயங்கரவாதி". ●






படிப்பகம்

www.padippakam.com



# 'தேசியம்' 'தேசம்'

## – ஒரு வரலாற்று அறிமுகம் –

வி.கே.எஸ்.பாரதி



ஏதாவது ஒரு விதத்தில் ஒருமைப்பாட்டைக் காணும், உணரும் ஒரு சமூகம் "தேசிய சமூகமாக" குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் வாழுகின்றது. இத்தேசிய சமூகம், தனக்கான "தேசம்" எது என்பதை கற்பிதம்/வரையறை செய்து கொள்கின்றது. இது ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

சமூகத்தை சிக்கலான முழுமையாக கருதிக்கொண்டே, அதன் பிரச்சனைகளை அணுகி ஆராய வேண்டும், என சமூகவியலாளர்கள் கூறுவர். அல்லது, சமூகக் கட்டமைப்பையும், அதன் உறவுகளையும், மிகவும் எளிமைப்படுத்தி, மேலோட்டமான, தீர்வுகளை முன்மொழிய வழி வகுக்கலாம் எனவும் கூறுவர். இன்றைய சமூகப் பிரச்சனைகளுக்கான, தீர்வை கடந்தகால வரலாறுகளிலிருந்து பெறும் படிப்பினை மூலம், இன்றைய சூழல்களுக்கு ஏற்றவாறு ஆய்வு செய்யும் பொழுது ஒப்பிட்டளவில் முன்னேறிய நியாயமான தீர்வுகளை கண்டறிய முயலலாம். ஆகவே, இன்று ஒரு பிரச்சனைக்கு கண்டறியப்படும் தீர்வானது, அப்பிரச்சனைக்கான, முடிந்த முடிவானதும், உறுதியானதும் என்றென்றும் பொருந்தக்கூடியதுமான, தீர்வல்ல. தீர்வுகள் கால மாற்றங்களுக்கும், வேறுபட்ட சூழல்களுக்கும் ஏற்ப மாற்றம் காணக் கூடியது ஏனெனில்,

"நேற்றைய உண்மைகள் இன்றைய பொய்கள் இன்றைய உண்மைகள் நாளைய பொய்கள்" ஆகவே, இன்றைய நியாயமான தீர்வுகளை தொடர்ச்சியான ஆய்வின் மூலம் காலத்திற்கு ஏற்ப மாற்றி வளர்த்துச் செல்ல வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, இன்றைய, சமூக அரசியல் சூழலில் முக்கிய தாக்கம் செலுத்தும் கருத்தாக்கமான 'தேசியம்' 'தேசம்' தொடர்பாக பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

வரலாற்றுப் போக்கில், சமுதாயத்தின் படைப்பான, மனித சமூகமானது. ஓரிடத்தில் நிலைபெற்று, வாழ ஆரம்பித்தது. இந்த நிகழ்வு தேசிய உணர்வுக்கு வித்திட்டது எனக் கூறலாம். ஏனெனில், தாம் நிலைகொண்டு வாழ ஆரம்பித்த மண்ணை தமதாக்கி கொண்டனர். தமது பிறவித் தோலின் நிறத்தை விரும்பினர். தாம் வாழ்ந்த சூழலுக்கு ஏற்ப பழக்க வழக்கங்களை ஏற்படுத்திக்கொண்டனர். ஆடை அணிகளை உருவாக்கிக் கொண்டனர். தமக்கிடையில் தொடர்பு கொள்ள ஒரு மொழியை உருவாக்கினர். தமது பொழுது போக்குக்காக கலைவகைகளைக் கண்டறிந்தனர். பிற்காலத்தில் தமக்கான மதத்தையும் உருவாக்கினர். இப்படியாக ஓரிடத்தில் வாழ்ந்த மக்கள் கூட்டம், தமக்கான மண்ணை, கலாச்சாரத்தை, மொழியை, சுவையை, மதத்தை, இனத்தை உருவாக்கி கண்டறிந்து கொண்டனர்.

மக்களுக்கும் மேற்குறிப்பிட்டவற்றுக்கும் இடையிலான பற்றுதலால், விருப்பால் ஏற்பட்ட உறவுக்கு, அடிப்படையான உணர்வே "தேசிய உணர்வாக" வெளிப்பட்டது எனக் கூறலாம். இத்தேசிய உணர்வே, "தேசிய குணாம்சம்" எனக் கூறப்படுகின்றது. இத்தேசிய குணாம்சத்தில் - மேற்குறிப்பிட்டவற்றில் நிறைந்தது ஒன்றிலாவது ஒருமைப்பாட்டைக் காணும் உணரும் ஒரு சமூகம் "தேசிய சமூகமாக" குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் வாழுகின்றது. இத்தேசிய சமூகம், தனக்கான "தேசம்" எது என்பதை கற்பிதம்/வரையறை செய்து கொள்கின்றது. இது ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

இது போன்று பல தேசிய சமூகங்கள் தத்தமது தேசங்களில் வாழ்ந்தனர்.

வரலாற்று நிகழ்வுகள் மூலம் "தேசிய சமூகங்களினுள்" அதிகாரப்படி முறை உருவாக்கப்பட்டது. இது போன்று தேசிய சமூகங்களுக்கிடையிலும் நிகழ்ந்தது. இது, மேலாதிக்கம் பெற்ற "தேசிய சமூகம்" பிற தேசிய சமூகங்களை உள்ளடக்கி, தனது "புதிய தேசத்தை" வரையறை செய்து கொண்டது. இன்று நாமறிந்த அறியும் வரலாறும் இந்த மேலாதிக்க சமூகத்தின் அல்லது அது வழிவந்த வரலாறு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதனால் பல/சில தேசிய சமூகங்கள் அழிக்கப்பட்டன. அல்லது தமது சுய தனித்துவத்தை, அடையாளத்தை இழந்து மேலாதிக்க சமூகத்துடன் ஒன்று கலந்தன. அல்லது பிரக்ஞை உணர்ச்சி கொண்ட ஒடுக்கப்பட்ட தேசிய சமூகம், தன் மீதான ஒடுக்கு முறைக்கு எதிராக, தனது தனித்துவத்தை அடிப்படையாகக் கொண்டு போராடின இது வரலாறு.

ஆரம்பகால ஒடுக்கப்பட்ட தேசிய சமூகங்கள் தமது "தேசிய குணாம்ச" உணர்வை வெளிப்படுத்த தெரியாமல் இருந்திருக்கலாம். அல்லது வெளிப்படுத்த முடியாதவாறான அடக்குமுறை நிலவியிருக்கலாம். அல்லது தேசிய ஒடுக்கு முறைக்கு எதிரான, தேசிய சமூகங்களின் "தேசிய விடுதலைப் போராட்டங்கள்" அன்றைய சூழலில் உலக மக்களின் கவனத்தை பெறாததற்கான சாத்தியங்கள் நிலவியிருக்கலாம். அல்லது தேசியவிடுதலைப் போராட்டங்கள் நடந்ததற்கான தடங்கள் தெரியாதவாறு மோசமான அடக்குமுறை நிலவியிருக்கலாம். ஆனாலும் 18ம் நூற்றாண்டுக்கு முன்னரும், தேசிய விடுதலைப் போராட்டங்கள் நடந்துள்ளதாக, இன்று சமூகவியலாளர்கள் கூறுகின்றனர்.

18ம் நூற்றாண்டு புரட்சிக்கு முன்னர் "நாகரிகமடைந்த தேசிய சமூகங்களின்" தேசிய உணர்வும், தேசமும் அங்கீகரிக்கப்பட்டன. "காட்டுமிராண்டித்தனமான தேசிய சமூகங்களின்(?)" தேசிய உணர்வும், தேசமும் அழியவேண்டும், அல்லது அழிக்கப்பட வேண்டியவை. அல்லது நாகரீக தேசிய சமூகங்களுடன் ஒன்று கலக்க வேண்டும் எனக் கூறப்பட்டன. மேலாதிக்க தேசிய சமூகங்களால், உருவாக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட பழமைவாத கருத்துக்கள் இன்றைய தேசியவாதக் கருத்துக்களிலும் ஆதிக்கம் செலுத்துகின்றன.

மேற்குறிப்பிட்ட புரட்சியின் பின்னர் உலக சமூகம் பெயரளவிலான பேச்சுரிமை, எழுத்துரிமை, சுதந்திரம் என்பவற்றைப் பெற்றன. இவை நடைமுறையில் அமுல்படுத்தப்படுவதைவிட, கருத்தளவில் பேசும் பொருள் ஆகின. இதே வேளை தொடர்புசாதன ஊடகங்கள் வளர்ச்சி கண்டன. இக்காலத்தில் உருவாகிவந்த முதலாளித்துவமும் இத்தேசிய கோட்பாட்டை அடியொற்றி, தமது போராட்டங்களை முன்னெடுத்தன. இந்த நிகழ்வானது "தேசியம்" என்பது முதலாளித்துவத்தின் பிறப்பு என்றும், இது முதலாளித்துவம் அழிய, அழிந்து விடும் எனவும் எதிர்வு கூறப்பட்டன. ஆனால் வரலாற்றில் அப்படி நிகழவில்லை என்பதை நாம் காண்கின்றோம்.

18ம் நூற்றாண்டின் பின், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மக்களை இரு பிரிவாக பிரித்தன.

"வரலாற்று பூர்வமான மக்கள்"
"வரலாற்று பூர்வமற்ற மக்கள்"

இதில் வரலாற்று பூர்வமற்ற மக்கள், எந்த அடிப்படையிலும், தமக்கான தேசியத்தையும், அதன் அடிப்படையிலான தேசத்தையும், தேச அரசையும் உருவாக்கி, தனித்து வாழ தகுதியற்றவர்கள். ஆகவே இவர்களது எதிர்கால வாழ்வு ஒன்று அழிவதிலோ அல்லது வரலாற்று பூர்வமான மக்கள் சமூகங்களுடன் ஒன்று கலப்பதில் தான் சாத்தியம் எனக் கூறப்பட்டது.

வரலாற்று பூர்வமான மக்கள் தொடர்பான கருத்து பின்வருமாறு தெளிவுபடுத்தப்பட்டது.

"மிகப்பெரிய மக்கள் தொகையையும், பரந்த பெரிய பிரதேசத்தையுமுடைய, சக்தியுடைய மக்களே தேச அரசை நிர்மாணித்து தேசமாக நிலவமுடியும்".

வரலாற்று பூர்வமான மக்களிலும் சிறிய மக்கள் தொகையையும் அல்லது சிறிய பிரதேசத்தையும் கொண்டவர்கள், தேச அரசை நிர்மானித்து தேசமாக நிலவமுடியாது எனக் கூறப்பட்டது. இவர்களது விதியும் ஒன்று அழிவதிலோ அல்லது தேசமாக வாழும் மக்களுடன் ஒன்று கலப்பதில் தான் உள்ளது எனவும் கூறப்பட்டது.

இக்காலத்தில் தேசியம், "தேசிய குணாம்ச" அடிப்படையிலான, தனித்துவமான, தனிப்போக்கு கொண்ட விடயமாக பார்க்கப்படவில்லை. மாறாக இக்காலத்தில், ஆதிக்கம் செலுத்திய வர்க்க, பொருளாதார சிந்தனையை அடிப்படையிலேயே பார்க்கப்பட்டது. இவ்வாறு இரண்டுக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட உருவானது இன்று பல முரண்பாடுகளையும் சிக்கல்களையும் உருவாக்கியுள்ளது.

இதன் பின்பு 19ம் நூற்றாண்டுகளில் தேசியம் இன்னுமொரு பரிமாணத்தைப் பெற்றது. தம் தம் நாடுகளில் நிலவிய, காலனித்துவ, ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்கள் நிகழ்ந்தன. இது சுதந்திர நாட்டுக்கான "தேசிய விடுதலைப் போராட்டடங்கள்" எனக் கூறப்பட்டன. இதில் ஒரு நாட்டில் வாழ்ந்த பல தேசிய சமூகங்கள் தமது தனித்துவமான தேசியத்தை காப்பற்றுவதற்காக தம்மீதான அந்நிய மேலாதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக "அந்நிய எதிர்ப்பு" என்ற அடிப்படையில் ஒருமை கண்டு தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தன. இந்த அந்நிய ஒடுக்குமுறையானது தேசிய சமூகங்களில் வாழ்ந்த மேலாதிக்க சக்தியினரையும் ஒடுக்கியது. ஆவர்களது நலன்களுக்கு எதிரானதாக இருந்தது. ஆகவே, இந்த ஒடுக்குமுறைக்கு எதிரான "தேசிய விடுதலைப் போராட்டத்தை" முன்னெடுத்து தலைமை தாங்கினர். இந்நிகழ்வுப் போக்கு இயல்பான மேலாதிக்க சக்தியினரின் நலன்கள் திருப்தி செய்யப்பட்ட போதெல்லாம் அந்நிய சக்தியினருடன் சமரசம் செய்ய தயங்கவில்லை. சில தேசிய விடுதலைப் போராட்டங்கள் மட்டுமே பரந்துபட்ட மக்களின் நலன்களின் அடிப்படையில் சமத்துவ, சமதர்ம சமூகத்திற்கான போராட்டங்களாக நிகழ்ந்தன.

காலனித்துவ ஆதிக்கத்திலிருந்து பெயரளவில் சுதந்திரம் பெற்ற நாடுகளில், அரச அதிகாரம் அந்நாட்டிலிருந்து ஆதிக்க சமூகத்திடம் அல்லது ஆதிக்க சக்தியினரிடம் கையளிக்கப்பட்டது. இம்மேலாதிக்க சமூகம், சக்தி, பிறதேசிய சமூகங்களை அடக்கி, ஒடுக்கி தன் மேலாதிக்கத்தை நிலைநாட்டும் நடவடிக்கைகளில் முன்னெடுத்தது. இதற்காக, பிற தேசிய சமூகங்களை அழிக்கவும் தயங்கவில்லை.

இப்புதிய ஒடுக்குமுறைக்கு எதிராக தேசிய சமூகங்கள் தம் சுதந்திரம் வேண்டி "தேசிய விடுதலைப் போராட்டங்களை முன்னெடுத்தன. இப்போராட்டத்தை முன்னெடுக்க முன்வைக்கப்பட்ட "தேசிய கோட்பாடு", "தேசிய குணாம்ச உணர்வின்" அடிப்படையில் கட்டமைக்கப்பட்டது. வர்க்க, பொருளாதார கண்ணோட்டத்தில் இப்போராட்டம் நியாயமானதா இல்லையா என பரிசோதிக்கப்பட்டது. ஆனாலும், இத்தேசிய விடுதலைப் போராட்டங்கள், "தேசிய சமூகங்களின் சுயநிர்ணய உரிமையை" வலியுறுத்த வித்திட்டன. இது வரலாற்றில் இடம் பெற்ற முன்னேற்றமான நிகழ்வாகும். இந்த உரிமையானது ஒரு தேசிய சமூகம், தனது தலைவிதியை தானே தீர்மானிப்பதற்கான பூரணமான உரிமை இதுவாகும்.

அக்காலத்தில் ஒரு தேசிய சமூகத்தின் தேசம் என்பதற்கான வரையறை கொடுக்கப்பட்டது. அதாவது தொடர்ச்சியான நிலப்பரப்பு, பொதுவானமொழி பொதுவான கலாசாரம் பொதுவான உளவியல் என்ற அடிப்படையில் வரையறை செய்யப்பட்டது. இவற்றைக் கொண்டுள்ள தேசிய சமூகமே, தனது தேசத்தை வரையறைசெய்து தேச அரசை நிலைநாட்ட முடியும் எனக் கூறப்பட்டது. இது ஆரம்பகால தேசிய கோட்பாட்டிலிருந்து முன்னேற்றகரமானதாக இருந்தது. ஆனால் இன்றைய தேசிய சமூகத்தின் பிரச்சனையை புரிந்து கொ்ளள போதுமானதாக இல்லை.

இன்றைய தேசிய விடுதலைப் போராட்டங்களை புரிந்து கொள்வதற்கு கடந்தகால தேசியவாத கோட்பாடுகள் காரசாரமான விமர்சகர்களுக்கும் மீள்வாசிப்புக்கும் உள்ளாடுகின்றன. கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்ட, மறைக்கப்பட்ட அழிக்கப்பட்ட "தேசியம்" தொடர்பான நிகழ்வுகள் கருத்துக்கள் தீவிரமான தேடல்கள் மூலம் வெளிவருகின்றன.

ஒரு தேசிய சமூகம், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட, இனத்தவரை, நிறத்தவரை, மொழியை, கலை, கலாசாரத்தை, பிரதேசத்தவரை, மதத்தவரை கொண்டிருக்கலாம். இத்தேசிய சமூகம் தமக்கிடையில், ஏதாவது ஒரு அடிப்படையில், ஒருமைப்பாட்டைக்கண்டு, பொதுஉணர்வை வெளிப்படுத்தலாம். இதுவே "தேசிய குணாம்சம்" எனக் கருதப்படுகின்றது. இதை அடிப்படையாகக் கொண்டு "தேசிய கோட்பாடு" கட்டமைக்கப்படுகிறது. இது, தனது தேசிய சமூகத்தின் "தேசம்" எது என்பதை கற்பிதம் செய்கின்றது. இத்தேசத்தின் சுயநிர்ணய உரிமை எந்த நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டதல்ல. தனித்துவமானது.

தேசியம் என்பது மக்களின் பொதுவான உணர்வின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டது என்பதனால், இதை யாரும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. இதனாலேயே இது முன்னேறிய முற்போக்கு பிரிவினரால் சமத்துவ, சமதர்மசமுதாயத்தைக் கட்டி எழுப்ப பயன்படுத்தப்படுகின்றது. இதைவேளை ஆதிக்க வெறி கொண்ட மேலாதிக்க பாஸிஸ, நாஸிஸ சக்திகளால் பிற்போக்கான நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

அனைத்து ஒடுக்குமுறைகளிலுமிருந்தும் நமது சமூகம் விடுதலைபெற்று தமக்குரிய சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கான விடுதலைப் போராட்டத்தில் நமது பங்கு என்ன?

இதைப்பற்றி சிந்திக்க வேண்டிய காலகட்டம் இது. உண்மையைத் தேடிச் செல்வோம் கண்டுபிடிப்போம். விவாதிப்போம்.. விமர்சிப்போம். கலந்துரையாடுவோம்.நியாயம் எதுவோ அப்பக்கம் எம்பக்கம். ●

படிப்பகம்

www.padippakam.com



## பார்த்ததும் கேட்டதும்

# வேட்டிக் கலாச்சாரம்

சந்துரு

நாங்கள் பெரிதாக இசைப்பிரியர்களோ அல்லது நடனப்பிரியர்களோ அல்லர். நாங்கள் எனும்போது நானும், நடனப்பிரியனும், பெரியதம்பியும் சின்னவரும்தான். ஆனாலும் இடையிடையே மாறுதலுக்காக மது அருந்தி இசையைக் கேட்பதற்காக கேளிக்கை விடுதிக்கு (டிஸ்கோ) செல்வதுண்டு.

முன்பெல்லாம் இவற்றில் அவ்வளவாக நாட்டமில்லாவிடினும் ஒவ்வோர் இடங்களிலும் மாறுதல் இருப்பதென்பதும் உள்ளவற்றுள் உள்ள நல்லவற்றை பிரித்தெடுப்பதிலும் தற்போது ஒருநாட்டம். செல்வதற்குரிய காரணத்தை எந்தவிதத்திலும் நியாயப்படுத்தலாம் என்றொருவர் சொல்வாராகிலும் அதற்கொரு புன்சிரிப்பை உதிர்த்திக்கொண்டே, இதை எழுதிக் கொண்டிருக்கையிலேயே என்னுள் இன்னுமோர் கேள்வியும் எழுந்தது. இதை வெறுமனே கேளிக்கை விடுதி என்பது மட்டும் சரியாகுமா? "சந்திப்பு நிலையத்தில் கேளிக்கை" என்று பெயரை இடலாமா? என புலம் பெயர்ந்து இத்தனை காலம் எமது நாட்டையும் சூழலையும் மறந்து ஐரோப்பிய வாழ்க்கையுள்ளா இலங்கை வாழ்க்கையுள்ளா? என்ற கேள்விக்கு அங்கும் இல்லாது இங்கும் இல்லாத அரைகுறை வாழ்க்கை என்பதே பதிலாக, வளர்ந்துவரும் இளம் சிறார்கள் வளர்கின்ற சூழலில் வாழமுயல, அதையும் பெற்றோர், சமூகமாகிய எம்மால் தடைவிதித்து அவர்கள் மனோ நிலையையும் பாதிக்கும் கருவிகளாக மாறவே எதையும் பெரிதாக செய்யமுடியாத கையாலாகாத் தனத்திற்காக எம்முன்னே பெரும் இருள் சூன்யமயமாகிறது.

ஒரு விடயத்தை எழுதவேண்டும் என்கிறபோதுகூட சரியானதிசையில் செல்கிறேனோ அல்லது அதை விட்டு தொலைதூரம் சென்றுவிட்டேனோ என்பதும்கூட பழமமற்றே இருக்கின்றது. எழுத்தை இழுத்து வைத்து தலைசீவி பவுடர்போட்டு மெருகூட்டும் பாடசாலைக்காலத்தை புதுப்பிக்கின்ற தேவையும் கூட.

இப்படியாக நாங்கள் ஒரு டிஸ்கோவிற்கு சென்று ஒரு சுற்று "பியர்" (0.5லீற்) போட்டாகிவிட்டது. அனேகமாக எல்லோருக்கும் ஒரு கிக்கில் நிரம்பக்கதை வரும், அல்லது ஏதோ ஒரு லோயர் ஆகிவிடுவர். ஜி.ஜின் நினைப்பிலும் வளர்ப்பிலும் உருவானவர்கள் சிலசமயம் எட்டு முழவேட்டியை இறுக்கி விரித்துக் கட்டியிருப்பர். பெரிய தம்பி நல்லபொடியன் ஆனால் யாருக்கும் ஏதாவது என்றால் உணர்ச்சி வசப்பட்டுவிடுவான் அவனது சுபாவம் அப்படி. ஆனால் தனது நிலை யிலிருந்தபடியே மற்றோரைப் பார்க்கின்ற ஒரு தன்மையையும்கூடவே வைத்திருப்பான். அது தவறென்ற ஒரு முடிவை நான் இங்கே கூறவரவில்லை. பலசமயங்களில் மூக்குடைபடவேண்டிய சந்தர்ப்பத்தையும் அது கூடவே அள்ளி வந்து விடும். இப்படித்தான் சென்றதடவை ஒரு ஆணும் பெண்ணும் முத்தமிட்டுக்கொண்டிருந்தனர் பெரியதம்பியின் அருகேயிருந்து. பெரியதம்பி இருப்பதற்கு விரும்புவதில்லை ஒரே நின்ற நிலைதான் குத்துக்கல்லாட்டம். தலை மட்டுமே சுற்றிச்சுழலும். பெரியதம்பியின் முன்னால் நடனப்பிரியன் அமர்ந்திருந்தான். அவன் பாடலை ரசித்ததாலோ என்னவோ தலையசைத்தும் கொண்டிருந்தான். முத்தமிட்டுக்கொண்டிருந்த சோடியின் அருகில் இன்னொருவன் வந்து நின்றான். அவனும் அந்தப்பெண்ணுடன் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தான். சுழல்கின்ற பெரியதம்பியின் தலை ஒருகணம் அவர்களில் நிலைத்தது. பின் அவன் நடனப்பிரியனுடன் ஏதோ கூறமுற்பட்டு அவனை அசைத்தான். நடனப்பிரியன் நடப்பவற்றைப் பெரிதாக எடுப்பதில்லையாதலால் அவனது அசைப்பிற்கு எதுவித பதிலுமளிக்காது இசையிலேயே மூழ்கியிருந்தான். சற்று எட்ட நின்று நானும் அவதானித்தேன். நான் சற்று தள்ளிநின்றபடியாலும் என்னுடன் இதைப்பற்றி பெரியதம்பி அவ்வளவாக கதைக்க எத்தனிக்கவில்லை. அதுமட்டுமல்ல என்னுடனும் சின்னவருடனும் கதைப்பதிலும் பார்க்க எதையும் நடனப்பிரியனுடன் கதைப்பதில் பெரியதம்பிக்கு ஒரு ஈடுபாடும் கூடவே. நடனப்பிரியனும் இவற்றுள் சற்று அனுபவஸ்தன்.

இது இவ்வாறிருக்க முத்தமிட்ட ஜோடி வேறெங்கோ சென்றுவிட்டு மீண்டும் அதே இடத்திற்கு வந்து முத்தமிட்டுக்கொண்டிருந்தனர். திடீரென அந்த ஆண் கீழே விழுந்தான். அதுவும் சரியாக பெரியதம்பியின் காலருகே, நடனம் அதைக்கண்டு கொள்ளவில்லை. பெரியதம்பிக்குப் பொறுக்கமுடியவில்லை சட்டெனக்குனிந்து தூக்கி அவனைக் கதிரையில் அமர்த்தி மேசையில் படுக்கவிட்டான். அவன் அவ்வாறே சற்று நேரம் தூங்கியிருக்க வேண்டும். அந்தப்பெண்ணோ முன்னர் கதைத்த பையனுடன் நடனமாடச்சென்றாள். பின்னர் அதே இடத்திற்கு வந்து அவனை முத்தமிட்டாள். பெரியதம்பி முறுகினான், நடனப்பிரியனை வலது கையால் ஓரேஅசைப்பு டேய்! இவன்ராப்பா திடுப்பெண்டு கீழேவிழுந்து போனான். அவள் அதைக்கவனிக் கேல்லையடாப்பா. நடனப்பிரியன் தலையில் கையை வைத்தபடியே "பியரைக்குடி" என்றுவிட்டு தலையசைப்பில் இருந்தான். "டேய் நான் சொல்லுறன் நீ கேக்கிறாய் இல்லை யடாப்பா"

ஐயோ! என்ன என்னபிரச்சனை எல்லாம் பிறகு கதைப்பம்

"அவன் விழுந்துபோனான்ராப்பா"

தூக்கிவிட்டுட்டாயல்லோ.

"ஓம்"

சரி பாட்டைக்கேள். பியரைக்குடி. தேவையெண்டால் ஆடு. அல்லாட்டி வேறஏதாவது வேணுமெண்டாலும் போய்ச்செய்.

தூக்கி பியர்குடித்த கிளாசை சற்று பலமாகவே மேசையில் வைத்தான் பெரியதம்பி.பொறுமையற்ற விளைவோ, உணர்ச்சிவசப்படும் தன்மையோ, சற்று அதிகமாக அருந்தியதோ, அல்லது ஏதும் தட்டுப்பட்டதோ தெரியவில்லை மேசையிலிருந்த பியர்கிளாஸ் உடைந்தது சாரரென.

திரும்பி நடனப்பிரியன் பெரியதம்பியைப்பார்க்க பயம்கலந்த சிரிப்பை உதிரவிட்டான்.

நடனப்பிரியன் கிளாசின் துண்டுகளை பொறுக்கி சாம்பல்தட்டின் மேல்வைத்தான்.

இதைக்குடி தனதுகிளாசை அவன் பக்கம்தள்ளினான்.

வேண்டாம் தலையாட்டலுடன் பதில்,எழுந்தான் நடனப்பிரியன் எங்கோ சென்றான்.திரும்பவும் நுரைத்தபியருடன் புதுகிளாஸ், பெரியதம்பி முன் வைத்தான் தனது பியரை பருகினான்.

வேண்டாம் என்றான் மறுபடியும், கணத்தில் புதுக்கிளாசை எடுத்துக் கொண்டான் பெரியதம்பி.

நான் அவனுடன் கதைக்கப்போறன் என்ற பெரியதம்பி அவனருகில் சென்றான்.

தலையை வலமும் இடமும் அசைப்பதும் அவனுடன் ஏதோ கதைப்பதும் தெரிந்தது. நடனப் பிரியன் அதையும் கடைக்கண்ணால் பார்த்ததும் பின்திரும்பியதையும் நானும் சின்னவனும் கூடவே அவதானித்தோம். சிகரெட்டை அவனுக்கும் ஒன்றைக் கொடுத்து பத்தியபடியே நடனத்தின் மேசைக்கு வந்தான்.

தூரத்தில் நின்ற நானும் சின்னவரும் இவர்களருகே வர மௌனம் சற்று கலைந்தது. போவமா? சின்னவன். நானும் தலையசைக்க நால்வரும் வீடு நோக்கி நகர்ந்தோம். "I have a Dream" ஒலித்துக்கொண்டிருக்க வீடு வந்ததாகிவிட்டது பெரியதம்பியின் கோபம் இன்னும் தாழவில்லை. எங்களுக்கும் சேர்த்து ஏதோ வாய்குள் முணுமுணுத்தான். ஒருவாறாக நடனப்பிரியன் வாயைத் திறந்தான் சரி இப்ப வேணுமெண்டாக்கதை.

"அவன்ராப்பா கீழேவிழுந்தவன்".

கண்டனான்.

"நான் அவனை தூக்கி இருத்தினனான்".

தெரியும்.

"அவளெடாப்பா வேற ஒருத்தனைக் கட்டிப்பிடிச்சு கொஞ்சிக் கொண்டு நிற்கிறாள்"

நானும சின்னவனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம்.

நடனப்பிரியன் நிதானமாக அவன் ஏன் அங்கைவந்தவன்?

"சந்தோசமாயிருக்க" பெரிய தம்பி.

அவள் அங்கை ஏன் வந்தவள்?

விளங்கியதற்கான அசைவு சொல்லமுடியாமல் மென்று விழுங்கியவன் ஒருவாறாக அதற்குத்தான் என்றான்.

உனக்கு அவனை ஏற்கனவே தெரியுமா?

"இல்லை" பெரியதம்பியின் பதில்.

அவன் சற்று அதிகமாக மது அருந்தியிருக்கலாம் அல்லது வேறு ஏதாவது போதைப்பொருள் பாவித்திருக்கலாம். ஆகவே கீழேவிழுந்திருக்கலாம். இது ஒருவேளை அவளுக்கு தெரிந்திருக்கலாம்

அல்லது அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய நிர்ப்பந்தமும் கூட அவளிற்கில்லை.

நீ என்ன விசர்க்கதை கதைக்கிறாய் அவள் மற்றவனோடை..

இப்ப கொஞ்சத்துக்கு முதல் தான் சொன்னனி ரெண்டுபேரும் சந் தோசமா இருக்க வந்தவையெண்டு.

"ம்" கொட்டினான் பெரியதம்பி.

"அவை செய்யினம்".

அவன் வேறுவிதத்தில், அவள் வேறுவிதத்தில் கூட சாத்தியமாகலாம்.

இதில் அவனே அலட்டிக் கொள்ளாதபோது நீ மட்டும் ஏன் அக்கறை எடுக்கிறாய்.

"நான் அன்னியன் தூக்கிவிடுறன் அவள்"...

தூக்கிவிட்டது உன்ரை மனிதாபிமானம்... ஆனா அடுத்தவிடயத்தில் நீ இன்னமும் எட்டுமுழவேட்டியை இறுக்கிக்கட்டயபடி நிற்கிறாய். தேர்த்திருவிழாவுக்கு போக வேண்டியனி மாறி இங்கை வேட்டியோட வந்திட்டாய். அல்லாட்டி டிஸ்கோ பாதுகாவலர் உடுப்பை மாட்டு. இனிமே வரேக்க ஜீன்ஸ் போட முயற்சிபண்ணு. பள்ளிக்குடத்தில் படிச்சதை எங்கடை சமூகத்தில நாங்கள் வளர்ந்ததை எங்களுக்குள்ள இன்னமும் இருக்கிற கருத்தை நீ வெளிப்படையாய் சொன்னது நல்ல விசயம். ஆனால் அது மட்டும் தான். அப்படியேதான் நாங்கள் இருக்கோணும் எண்டுற தில்லை கொஞ்சம் வித்தியாசமாய் யோசிக்கலாம். வித்தியாசமாய் இருக்கலாம். மற்றவையின்ரை சுதந்திரத்தையும் மதிப்பம். பொம்பிளையளைப் பற்றியும் கொஞ்சம் யோசிச்சுப்பார்ப்பம் வித்தியாசமா இருக்கிறதையும் அனுமதிப்பம்.

எனக்கு கட்டியிருந்த நாலுமுழமும் கழன்றமாதிரி இருந்தது. மனசில வேட்டியளோடை மட்டுமே நாங்கள் இன்னும் திரியிறமோ? என்று என்னைச் சின்னவன் கேட்காமல் பார்வையால் கேட்டது எனக்கு விளங்கியது மற்றவர்களுக்கும் விளங்கியிருக்கும். பெரியதம்பி கதிரையில் இருக்க நடனம் எல்லோருக்கும் படுக்கையை விரித்தான்.

*கருமை இருளை*
*நிலவு பருக*
*மதுவைப்பருகிய*
*எங்களின் மாலை*
*முடிவுக்கு வந்தது.*

30.11.97இல் சர்வதேச தமிழ் மாணவ மன்றத்தினரால் லண்டன் ஈலிங் நகரமண்டபத்தில், மண்டபம் நிறைந்த ரசிகர் மத்தியில் சிறப்புற நடந்து முடிந்த

## 'கல்லூரிப் பூக்கள்'

கலை நிகழ்ச்சியிலிருந்து சில காட்சிகள்.


அமீரா


கலா


லோஜி



T-Vybeஇனர்


ராஜ், சுதன்


சுஜி


அனுஷா


தர்ஷினி, பவன்


மெய்ச்சுடரே(கவிதா நிகழ்வு)

இலங்கையில் இருந்தும் இந்தியாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட சகல விதமான மளிகைப் பொருட்களையும்,
ஓடியோ கசட்டுகள், சீடிக்கள், தமிழ் சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றையும் எம்மிடம் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ் திரைப்பட வீடியோ கசற்றுகளின் தரமான பிரதிகளை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

SIVRAJ ENTERPRISES

114 TOOTING HIGH STREET, LONDON SW17 0RR
Tel: 0181 682 1677/ 0850 846 238, Fax: 0181 767 0167

www.padippakam.com



# தமிழீழ விடுதலைப் போராட்டமும், அமெரிக்காவும்

விடுதலைப்புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக அடையாளப்படுத்தி அதை தனது நாட்டில் தடை செய்திருப்பதன் மூலமாக அமெரிக்க அரசு தமிழ்த் தேசத்தின் போராட்டம் தொடர்பான தனது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது தமிழ்த் தேசம். அமெரிக்க அரசின் இந்த அறிவிப்பை வெறுமனே விடுதலை புலிகள் இயக்கம் தொடர்பான விடயமாக மட்டும் கருத முடியாது. மாறாக சிறீலங்கா அரசுக்கு எதிரான தமிழ்த்தேசத்தின் போராட்டம் குறித்து அமெரிக்க அரசு கொண்டிருக்கின்ற நிலைப்பாட்டின் வெளிப்பாடாகவே இதைக் கருத வேண்டும். தமிழ் தேசத்தின்

> **உலகளவில் தேசியப் போராட்டங்கள் நீடிப்பதும் பலம் பெறுவதும் அவை ஒரு கட்டத்தில் அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டை மேற்கொள்வதும் "புதிய உலக ஒழுங்கை" ஏற்படுத்தும் அமெரிக்காவிற்கு நெருக்கடிகளையும் பிரமாண்டமான செலவுகளையும் ஏற்படுத்துகின்றன.**

போராட்டம் தொடர்பாக இன்றுவரை காத்திரமான நிலைப்பாடுகள் எதனையும் முன்வைக்காத அமெரிக்க அரசு இப்போது விடுதலைப்புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக அறிவித்து தடை செய்திருப்பது ஒரு தற்செயல் நிகழ்ச்சிஅல்ல. பின்வரும் உண்மைகளை கவனத்தில் கொள்வதன் மூலம் நாம் இது குறித்து ஒரு புரிதலைப் பெற முடியும்.

1. விடுதலைப்புலிகள் இயக்கம் இன்றுவரை அமெரிக்காவிலோ அல்லது வேறு நாடுகளிலோ நேரடியான அமெரிக்க நலன்களுக்கு எதிரான, நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கவில்லை. அமெரிக்காவில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கியமான செயலகங்கள் கிடையாது. கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும் போது அமெரிக்காவில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகள் குறைவாகவே இருந்திருக்கின்றன.

2. சர்வதேச அரங்கில் விடுதலைப்புலிகள் இயக்கம் அமெரிக்க அரசுக்கு எதிரான முகாம்களுடனோ அல்லது நாடுகளுடனோ தன்னை இனம் காட்டியிருக்கவில்லை. இதற்கு மாறாக ஒருபுறம் அமெரிக்காவின் பூரண ஆதரவு பெற்ற இஸ்ரேலில் விடுதலைப்புலிகள் இயக்கம் ஆயுதப் பயிற்சிகள் பெற்றிருக்கின்றது. மறுபுறம் சில குறிப்பிட்ட விடயங்களில் அமெரிக்காவுடன் முரண்படுகின்ற இந்தியாவுடன் விடுதலைப்புலிகள் இயக்கம் பகிரங்கமான கடுமையான முரண்பாட்டைக் கொண்டிருக்கின்றது.

3. விடுதலைப் புலிகள் இயக்கத்தை பொறுத்தவரை, தமிழீழ விடுதலை என்பதை, தனது இலக்காகக் கொண்டிருக்கின்றதே தவிர, சர்வதேச ரீதியில் வேறுவகையிலான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் எவற்றிலும் அது ஈடுபட்டதில்லை.

4. தமிழ்த்தேசத்தின் மீது பல்வேறு தளங்களிலும் தொடர்ச்சியான ஒடுக்குமுறைகளை மேற்கொண்டு வருகின்ற அடிப்படை மனித உரிமைகள் அடங்கலாக தமிழ்த் தேசத்தின் அனைத்து உரிமைகளையும் பறித்திருக்கின்ற சிறிலங்கா அரசுக்கும், அதன் ஆயுதப்படைக்கும் எதிராக விடுதலைப்புலிகள் இயக்கம் போராடி வருகின்றது. இவ்வகையில் ஐக்கிய நாடுகள் சாசனத்திற்கும், சர்வதேச அரங்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற தேசங்களின் சுயநிர்ணய உரிமைக்கும் ஏற்பவே சிங்கள அரசுக்கு எதிராக விடுதலைப்புலிகள் இயக்கத்தின் போராட்டம் அமைந்திருக்கின்றது.

இந்த உண்மைகள் அனைத்தும் விடுதலைப்புலிகளுக்கும் அமெரிக்க அரசுக்கும் இடையே தனிப்பட்ட ரீதியில் முரண்பாடுகள் நிலவக்கூடிய சாத்தியம் இல்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறிருந்தும் விடுதலைப்புலிகள் இயக்கத்தை அமெரிக்க அரசு தடை செய்திருப்பதன் பின்னாலுள்ள அரசியல் காரணிகளை சரியாக அடையாளம் காண்பது அவசியம். இவ்வாறு அடையாளம் காணத்தவறின், தமிழ்த் தேசம் தனது போராட்டம் தொடர்பாக நண்பர்கள், எதிரிகள் குறித்த இனம் காணலில் இன்னும் பல கடுந்தவறுகளை இழைக்கும் நிலை ஏற்பட்டு விடும்.

இத்தகைய அரசியல் காரணிகளை நாம் பின்வருமாறு இனம் காணலாம்.



முதலாவது விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ்த் தேசத்தின் ஒரு கூறு. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒரு விளைவு. மேலும் தமிழ்த் தேசத்தின் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்ற தேசியசக்தி என்று புரிந்து கொள்வது முக்கியமானது. விடுதலைப்புலிகள் இயக்கம் அரசியல் தளத்தில் பல வழிகளில் விமர்சனத்திற்குரியவர்கள் என்ற போதிலும் இவ்வியக்கம் தமிழீழ போராட்டத்தை இன்னும் உறுதியாக முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதோடு தமிழ் தேசத்தின் விடுதலைப் போராட்டம் உள்நாட்டு மற்றும் சர்வதேச அரங்கில் இன்னமும் வலுவுடன் திகழ்வதற்கும், 'மறக்கப்படாமல்' இருப்பதற்கும் இவ்வியக்கத்தின் ஆயுதப் போராட்டமே காரணமாயிருக்கின்றது என்ற வகையிலும் விடுதலைப்புலிகள் இயக்கம் தேசிய முக்கியத்துவம் பெறுகின்றது. இராணுவ ரீதியில் விடுதலைப்புலிகள் இயக்கம் பெற்றிருக்கின்ற அனுபவங்களும் திறன்களும், நவீன கருவிகளுடனான பரிச்சயமும் சுயபரீட்சார்த்த முயற்சிகளும் மிகப்பெரியவை. இவ்வாறு விடுதலைப்புலிகள் இயக்கம் இராணுவ ரீதியில் அடைந்திருக்கின்ற வளர்ச்சி சாராம்சத்தில் தமிழ்த் தேசத்தின் வளர்ச்சி தான். இவ்வாறு ஒரு தேசம் இராணுவ ரீதியில் ஆற்றலுடன் சுயமான நவீனமான உத்திகளுடனும் அமெரிக்க அரசின் கட்டுப்பாட்டுக்கு வெளியேயும் வளர்ச்சியடைவதை அமெரிக்க அரசு தனது நலன்களுக்கும் பாதகமானது என்றே எப்போதும் கருதிவந்திருக்கின்றது. இவ்வகையில் தமிழ்த் தேசத்தின் இத்தகைய வளர்ச்சியை அமெரிக்க அரசு ஒருபோதும் செயலற்ற ரீதியில் (Passive) பார்த்துக் கொண்டிருக்காது. எனவே தான், ஒரு புறம் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு சர்வதேச ரீதியில் நெருக்குதல்களை ஏற்படுத்தி பலவீனப்படுத்ததுவதோடு மறுபுறம் தமிழ்த் தேசம் தனியான அரசு அமைப்பதை தடுத்து, சிறிலங்கா அரசுக் கட்டமைப்புக்குள் தமிழ்த் தேசத்தின் ஆற்றல்களை இராணுவ ஆற்றல் அடங்கலாக "கரைத்து" விடுவதற்கும் அமெரிக்க அரசு முயற்சிக்கின்றது. இராணுவ பொருளாதார ரீதியாக சிறிலங்கா அரசை தனது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துவிட்ட தேசத்தை தொடர்ந்தும் வைத்திருப்பதன் மூலம் அவர்களைக் "காயடிப்பது" எளிதில் சாத்தியமாகும்.

இரண்டாவதாக தனியான அரசை அமைப்பதற்கான தமிழ்த் தேசத்தின் போராட்டம் அடையக் கூடிய வெற்றியானது சர்வதேச அரங்கில் ஏற்படுத்தக் கூடிய தாக்கம் இங்கு முக்கிய கவனத்தைப் பெறுகின்றது. ஒரு சில நாடுகளை பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகள் தவிர்த்து ஏனைய நாடுகள் அனைத்திலும் தனித்துவமான அம்சங்களையுடைய ஒன்றுக்கு மேற்பட்ட சமூகங்கள் ஒரே அரசுக் கட்டமைப்பின் கீழ் இருத்தி வைக்கப்பட்டிருக்கின்ற நிலைமையே இன்று காணப்படுகின்றது. இத்தகைய அரசுகள் அமெரிக்காவிற்கு விசுவாசமானவையாகவும் உள்ளன. இப்படிப்பட்ட அரசுகளிலிருந்து பிரிந்து தமக்கென சொந்த அரசை அமைப்பதற்கான மேற்படி அரசியல் சமூகங்களின் போராட்டங்கள் அடைகின்ற வெற்றியானது இத்தகைய ஒடுக்குமுறை அரசுகளுக்கு எதிராக இடம்பெறுகின்ற தேசியப் போராட்டங்களுக்கு புதிய உத்வேகத்தை அளிப்பதோடு, புதிய தேசிய எழுச்சிகள் ஏற்படுவதற்கும் தூண்டு கோலாக அமையக்கூடிய சாத்தியத்தை பெருமளவில் கொண்டுள்ளன.

மூன்றாவதாக, பெரும்பாலான தேசியப் போராட்டங்கள் ஒரு கட்டத்தில் அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்து வந்திருப்பது வரலாற்று உண்மையாகும். ஏகாதிபத்தியங்களின் தலைமையாக அமெரிக்க அரசு செயற்படும்வரை, தேசியப் போராட்டங்கள் இவ்விதம் ஒரு கட்டத்தில் அமெரிக்க எதிர்ப்பு நிலையை எடுப்பது தவிர்க்க முடியாதது. இந்த தாக்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் முற்றிலும் பொருந்தக் கூடியது. இராணுவ பொருளாதார ரீதியாக முற்றிலும் தன்னில் தங்கியிருக்கின்ற போராட்டம், சாராம்சத்தில் அமெரிக்க அரசின் நலன்களுக்கு எதிரான போராட்டமே. தமிழீழ விடுதலைப் போராட்டம் எவ்வளவிற்கு நீடித்துப் பலம் பெறுகின்றதோ அவ்வளவுக்கு இப்போராட்டம் சரியான தலைமையினால் வழிகாட்டப்படக் கூடிய நிலையும் அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுக்கின்ற நிலையும் அதிகமாகும். எனவே புலிகள் தவிர்த்து பெரும்பாலான தமிழ் அரசியல் அமைப்புகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சிறீலங்கா மற்றும் இந்திய அமெரிக்க அரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்ட நிலையில் தொடர்ச்சியாகவும் உக்கிரமாகவும் போராடிக் கொண்டிருக்கின்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தை பலவீனப்படுத்தி சிறீலங்கா அரசுக் கட்டமைப்புக்குள் ஒரு தீர்வைக் காணும்படி அதை நிர்ப்பந்திப்பது அமெரிக்க அரசுக்கு அவசியமாகின்றது. அதன் மூலமாக தமிழீழ போராட்டத்தை முறியடிப்பதற்கான ஒரு சாத்தியத்தைக் காண்பதற்கு அமெரிக்க அரசு முயற்சிக்கின்றது.

உலகளவில் தேசியப் போராட்டங்கள் நீடிப்பதும் பலம் பெறுவதும் அவை ஒரு கட்டத்தில் அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டை மேற்கொள்வதும் "புதிய உலக ஒழுங்கை" ஏற்படுத்தும் அமெரிக்காவிற்கு நெருக்கடிகளையும் பிரமாண்டமான செலவுகளையும் ஏற்படுத்துகின்றன. தனது கட்டுப்பாட்டின் கீழ் வரக் கூடிய 'முரண்பாடற்ற' புதிய உலகை ஒழுங்கமைப்பதன் மூலமாக அடிக்கடி நெருக்கடிக்குள் சிக்குண்டு போகும் தனது பொருளாதாரத்தை நிலைநிறுத்தி தனது வல்லமையை மீண்டும் உறுதியாக நிலைநாட்ட விரும்புகின்ற அமெரிக்க அரசைப் பொறுத்தவரை, தனக்கு எதிராக செயற்படக்கூடிய புதிய அரசுகளின் தோற்றம் மகிழ்ச்சிக்குரியதாக இருக்கமாட்டாது. இந்நிலையில் தேசிய விடுதலைப் போராட்டங்களை தடுப்பது அல்லது பலவீனப்படுத்துவது என்ற கொள்கையின் அடிப்படையில் செயற்படுகின்ற அமெரிக்க அரசுக்கு, விடு

> **அமெரிக்க அரசின் இந்த அறிவிப்பை வெறுமனே விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பான விடயமாக மட்டும் கருத முடியாது. மாறாக சிறீலங்கா அரசுக்கு எதிரான தமிழ்த்தேசத்தின் போராட்டம் குறித்து அமெரிக்க அரசு கொண்டிருக்கின்ற நிலைப் பாட்டின் வெளிப்பாடாகவே இதைக் கருத வேண்டும்.**

தலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதும், அதனூடாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்துவதும் அவசியமாகிறது.

இவற்றோடு இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை தீவின் அமைவிடமும் திருகோணமலை துறைமுகமும் அமெரிக்க அரசின் ஏகாதிபத்திய நலன்களுக்கு எப்போதுமே சாதகமாக அமையக் கூடியவை. இந்தத் துறைமுகத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு நீண்ட காலமாக முயற்சித்து வருகின்ற அமெரிக்க அரசுக்கு இன்றைய சூழ்நிலை மிகவும் வாய்ப்பானதாகவுள்ளது. ஒரு புறம்

www.padippakam.com



சிறீலங்கா அரசை முற்றாக தனது கட்டுப்பாட்டிற்குள் அமெரிக்க அரசு கொண்டு வந்துவிட்டது. மறுபுறம், இங்கு அமெரிக்க அரசின் ஊடுருவலும் செல்வாக்கும் உறுதியாக ஏற்படுவதை எதிர்த்து வந்த இந்திய அரசு இப்போது இத்தகைய தனது எதிர்ப்பை கைவிடுகின்ற நிலைக்கு மாறிவிட்டது. இத்தகைய சாதகமான சூழலில் தமிழீழ போராட்டம் வெற்றி பெற்று அதன் மூலம் தனது நீண்ட நாளைய எதிர்பார்ப்பு கைவிட்டுப் போகக்கூடிய நிலை எற்படுவதை அமெரிக்க அரசு செயலற்றுப் பார்த்துக் கொண்டிருக்காது. எனவே விடுதலைப் புலிகள் இயக்கத்தை பலவீனப்படுத்துவதும், தமிழீழப் போராட்டத்தைக் கைவிட்டு, சிறீலங்கா அரசுக் கட்டமைப்புக்குள் ஒரு தீர்வை ஏற்கும்படி தமிழ்த் தேசத்தை நிர்ப்பந்திப்பதும் அமெரிக்க அரசின் தெரிவாக இருக்கின்றது.

இவ்வாறு தமிழ்த் தேசத்தின் போராட்டத்தையும், விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் தனது நலன்களுக்கேற்ப கையாள விரும்புகின்ற அமெரிக்க அரசு மறுபுறத்தில் சிறீலங்கா அரசுக்கு முற்றிலும் சாதகமான நிலைப்பாட்டை மேற்கொண்டு வருகின்றது. சிங்கள மக்களின் எதிர்பார்ப்புகளையும், போராட்டத்தையும் முறியடித்து 'அமெரிக்க குரலை' (Voice of America) பாதுகாத்து வருகின்ற சிறிலங்கா அரசின் ஜனநாயக நடைமுறைகள் குறித்து சர்வதேச அரங்கில் சிலாகித்துப் புகழ்வதன் மூலமாக, தன்னுடையதும் ஏனைய மேற்கு நாடுகளினதும் இராணுவ, பொருளாதார, ஆதரவை சிறீலங்கா அரசுக்கு தொடர்ச்சியாகப் பெற்றுக் கொடுப்பதில் அமெரிக்க அரசு முன்னின்றுழைக்கிறது. ஐ.நா.சாசனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற சுயநிர்ணய உரிமையை மட்டுமல்ல உயிர்வாழ்தல், அடங்கலான அடிப்படை மனித உரிமைகளையே தமிழ்த் தேசத்திற்கு சிறீலங்கா அரசு மறுத்து வருகின்றது. சிறீலங்கா அரசின் கொடூர அடக்குமுறைகளையும் அரச பயங்கரவாத நடவடிக்கைகள்ளையும் கண்டித்து உறுதியான நடவடிக்கை எதையும் இன்று வரை மேற்கொள்ளாத அமெரிக்க அரசு விடுதலைப்புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக பிரகடனப்படுத்தி தடை செய்திருப்பமையும், தமிழ்த் தேசத்தின் விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்துவதும், இங்கும் சர்வதேச அளவிலும் தனது நலன்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்ப்பதும் அடிப்படைக் காரணங்களாகின்றன.

இத்தகைய பின்புலத்தில், விடுதலைப்புலிகள் இயக்கம் குறித்த அமெரிக்க அரசின் பிரகடனமும் தடையும், வெறுமனே ஒரு இயக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என்று கருதுவது தவறு. மாறாக இவற்றை தமிழ்தேசத்தின் போராட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என்று மதிப்பிட்டு, அவற்றிலிருந்து தன்னை பாதுகாப்பதற்கான எதிர் நடவடிக்கைகளை தமிழ்த் தேசம் தெளிவாக வரையறுத்துக் கொள்ள வேண்டும். இதைச் சரியாக நிறைவேற்றத் தவறின், விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமல்ல, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உறுதியாக முன்னெடுக்கக் கூடிய சகல அமைப்புகளுமே பயங்கரவாத அமைப்புகளாக பிரகடனப்படுத்தப் பட்டு, தடை செய்யப்படக்கூடிய நிலை உருவாவதை தவிர்க்க முடியாது போய்விடும். இதன் விளைவாக தமிழ்த்தேசத்தின் விடுதலைப் போராட்டம் இங்கும் சர்வதேச அளவிலும் பலவீனப்படுத்தப்பட்டு சிதைக்கப்படுவதும் தவிர்க்க முடியாத நிகழ்வாகிவிடும். இந்த உண்மையை மறுப்பது என்பது அரசியல் அறியாமையையே காட்டும்.

நிகழ்கால வரலாற்றியக்கம் நவீன தேசிய இயக்கங்களின் தேசியப் போராட்டங்களின் வரலாறாக தீவிரம் பெற்று வருகின்றது. எந்தளவுக்கு ஏகாதிபத்திய சக்திகள் உலகை ஒரே ஒழுங்கின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றனவோ, அந்தளவுக்கு அதற்கு எதிரான போக்குகளும் புதிய அரசுகளை உருவாக்குவதற்கான போராட்டங்களும் தீவிரம் பெறுகின்றன. தமது நலன்களை மேலும் உறுதிப்படுத்தவும், மேலும் விரிவுபடுத்தவும் உலகை ஒன்றிணைக்க விரும்புகின்ற ஏகாதிபத்திய சக்திகளின் முயற்சிகளுக்கு எதிரான தர்க்கரீதியான மறுப்பாக புதிய அரசுகளின் உருவாக்கம் அமைகின்றது. இத்தகைய ஒரு மறுப்பாகவே, தமிழ்த்தேசத்தின் விடுதலைப் போராட்டமும் அமைந்திருக்கின்றது. விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பான அமெரிக்க அரசின் நிலைப்பாடு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை மேலும் ஆழப்படுத்தியிருக்கின்றது. இப்போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான திசையில் மேலும் உறுதியாகச் செல்வதற்கான அரசியல் ஊக்கியாக அமைந்திருக்கின்றது. இத்தகைய போக்கை துல்லியமாக இனம்காண்பதும், இதன் திசையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் முன்னெடுத்துச் செல்வதும் தமிழ்ச் சக்திகளின் வரலாற்றுக் கடமையாக அமைந்திருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று முக்கியத்துவத்தையும், இப்போராட்டத்திற்கு நீண்ட காலத்தில் யார் எதிரிகளாக, நண்பர்களாக அமையப் போகிறார்கள் என்பதையும் விடுதலைப் போராட்ட அமைப்பு என்ற வகையில் விடுதலைப் புலிகள் அமைப்பு தெளிவாக இனங்கண்டு கொள்ள வேண்டும். தமிழீழ போராட்டத்தின் நிச்சயமான எதிரிகள் என தம்மை பிரகடனம் செய்து காட்டும் இந்திய, அமெரிக்க அரசுகளை குறித்து மென்மையான மதிப்பீடுகளை தாம் கொண்டிருப்பதாக தொடர்ந்தும் காட்டி அவ்வரசுகளை சாந்தப்படுத்தி விடலாம் என்ற மாயையில் இருந்து முதலில் தம்மை விடுவிப்பதுடன், பின் தமிழ் மக்களையும் விடுவிக்க வேண்டும். எதிர்கால நெருக்கடிகளை முகம் கொடுக்கும் வகையில் போராட்டத்தை தயார் செய்ய வேண்டிய புதிய அணி சேர்க்கைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். சொந்த தேசத்தில் உள்ள அனைத்து போராட்ட சக்திகளையும், இதே லட்சியத்திற்காக ஊன்றி நிற்கும் அரசியல் சக்திகளையும் தனது நட்பு சக்திகளாக்க வேண்டும். மாறாக தடை குறித்து தாம் "ஆச்சரியப்படுவதாக"க் கூறி தம்மையும் மக்களையும் ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. அமெரிக்க அரசு தான் தமிழீழவிடுதலைப் போராட்டத்தின் எதிரி என்பதை அப்பட்டமாக வெளிக்காட்டிவிட்டது. இந்நிலையில் இவ்வல்லரசுகளின் எதிர்ப்பை மீறி தமிழீழ இலட்சியத்தை அடையும் வகையில் புரட்சிகர அணிச்சேர்க்கைகளை உருவாக்கி கொள்வதா இல்லையா என்பதே விடு தலைப்புலிகள் உடனடியாக பதில், காணவேண்டிய விடயம். ●

---



# சமாதானமும் சமாதான பொதியும்

ஸ்ரீலங்கா (சந்திரிகா) அரசின் சமாதான பொதிக்குள் என்னத்தை வைத்திருக்கு என்பது திட்டவட்டமாக தெரியவில்லை. ஆனால் இப்பொதியைப்பற்றி தனக்குள்ளும், மற்றைய கட்சிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளின் போது வெளிவரும் செய்திகளை பார்க்கும்போது ஸ்ரீலங்காவை இதுவரை ஆண்டு வந்த அரசுகளைப் போல் பேரினவாதத்துக்கு கட்டுப்பட்டும், சிங்கள மக்களின் தேர்தல் வங்கியை பெறுவதற்கும் ஏற்ப தனது சமாதான பொதியை நடைமுறைப்படுத்த காத்திருக்குது. சமாதான பொதியில் இருந்து அதிகார பரவலாக்கல், மாகாணத்துக்கு அதிகாரம், தமிழ் மக்களுக்குரிய பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பன உள்ளார்ந்தமாக தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்காக சொல்லப் படுபவவையில்லை. மறைமுகமாக தனது இராணுவ செயல்பாட்டை நியாயப்படுத்துவதற்கும், இராணுவ தளவாடங்களை குவிப்பதற்கும், சர்வதேசத்தின் ஆதரவை பெறுவதற்கும் ஏற்ப வரும் "உச்சாடன வார்த்தைகள்". தனது சமாதான தீர்வு பொதியை வெளிப்படையாக தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்தி, அவர்களின் விருப்பத்தை பெற்று தீர்வை நடைமுறைபடுத்தாமல் எதிர்கட்சி (ஐக்கியதேசியகட்சி) அரசியல் லாபம் அடையாதமுறையிலும், சமாதான பொதிக்கு ஆலோசனை பெறுவதற்கு சகல கட்சியிடமும் பேச்சுவார்த்தை நடத்தி நாட்களை கடத்திக் கொண்டு, இராணுவ நடவடிக்கை மூலம் தனது காய்களை நகர்த்திக் கொண்டு சந்திரிகா அரசு இருக்குது. இன்று தோன்றியுள்ள சிங்கள ஆணைக்குழு (30 மேற்பட்ட சிங்கள, பௌத்த அமைப்புகளையும், ஓய்வு பெற்ற நீதிபதி எஸ்.டபிள்யூ.வல்பிட்ட தலைவராக கொண்டு இவ் ஆணைக்குழு இயங்கியது) சந்திரிகா அரசின் தீர்வு பொதி தமிழ்மக்களுக்கு நாட்டைத் துண்டாடி கொடுக்குப் போகுது. பௌத்த மதத்தையும், சிங்களத்தையும் காப்பாற்ற புறப்படுவோம் என்ற கோஷத்துடன் ஊர்வலங்கள் நடத்திக்கொண்டு இருக்குது. சமாதான ஒப்பந்தங்கள் நடக்கும் நேரம் அவற்றை எதிர்கட்சி உற்சாகப்படுத்துவது வழமை. ஆனால் சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கும் வைப வத்தில் ஐக்கிய முன்னணியின் பொது செயலாளர் அமைச்சர் ஜெரட்டன கலந்து கொண்டார். அமைச்சர் கலந்துகொண்டதன் மூலம் சிங்கள ஆணைக்குழவின் செயற்பாடுகளுக்கு அரசு தனது ஆதரவை வழங்கிவந்துள்ளது என்பது தெளிவாகியுள்ளது. ஒரு சிலர் சந்திரிகா (Madam) தமிழ்மக்களின் பிரச்சனைகள் தீர்க்க விருப்பம் கொண்டவர், நல்லவர், மற்றைய தலைவர்கள்போல் இல்லை ஆனால் அரசாங்கம் என்று வரும்போது அவருடைய முழு விருப்பங்களை நிறைவேற்ற முடியாமலிருக்குது. சந்திரிகா சரி, வேறு எந்த தலைவர்களானாலும் பேரினவாத சகதியில் இருந்து தங்கள் காலை எடுக்காமல் எந்த நல்ல எண்ணமோ அல்லது எந்த அதிகாரத்தை கொண்டோ எதையும் சாதிக்க முடியாது. சந்திரிகா அனுராதபுரத்தில் 'நாம் இலங்கையர், ஒருநாடு, ஒரே இனம்' என்ற கோஷத்தை முன்வைத்து ஸ்ரீலங்கா அரசு பௌத்த, சிங்கள அரசு என்பதை மீண்டும் உறுதிப்படுத்தி, தான் பேரினவாதிகளின் தலைவி என்பதை தெரியப்படுத்தியுள்ளார். இலங்கை பல தேசங்களைக் கொண்டது. இத்தேசங்களின் சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம் பேணப்படும் போதுதான் இலங்கை ஒரு நாடாக இருக்க முடியும். இதைவிட்டு ஸ்ரீலங்கா பேரினவாத அரசு தனது இராணுவ ஒடுக்குறையின் ஊடாக மற்றைய தேசங்களை ஒடுக்க முற்படும்போது மற்றைய "தேசங்கள் பிரிந்து செல்வதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது".

தமிழர் விடுதலை கூட்டணி, ஆயுதபோராட்டத்தில் ஈடுபட்ட குழுக்கள் தமிழ் தேசத்தின் விடுதலையை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆதரவு கொடுத்து, அதற்கு குரல் கொடுப்பதற்கு பதிலாக, அரசின் இராணுவ ஒடுக்குமுறையினால் விடுதலைப்புலிகள் பலவீனப்படுவதன் ஊடாக தாங்கள் வலுப்பெற்றவர்களாக மாறவேண்டும் என்ற நப்பாசையில் ஸ்ரீலங்கா அரசுக்கு முட்டுகொடுத்து அரசாள வைப்பதுடன், தமிழ்தேசத்தை ஒடுக்க அரசுக்கு ஆலோசனைகள், உதவிகள் (அரசியல்ரீதியில், இராணுவரீதியில்) யார் வழங்குவதில் வல்லவர்கள் என்று போட்டியிட்டு செயல்படுகின்றார்கள். சுதந்திரத்தின் பின் வந்த அரசுகள் திட்டமிட்டு நடத்திய குடியேற்றம் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமான அம்பாறையை இழந்து, கிழக்கை மணலாற்று குடியேற்றம் மூலம் வடக்கில் இருந்து பிரிப்பதற்கும், திருகோணமலை மாவட்டத்தில் குடியேற்றத்தினூடாக சிங்களமக்களின் விகிதாசாரம் கூடி தமிழ் மாவட்டம் என்ற தன்மையை இழக்கும் வாய்ப்பை பெற்றுள்ளது. அத்துடன் தமிழ், முஸ்லிம் மக்களை மோதவிட்டு அவர்களுக்குள் குரோதம் வளர்ப்பதன் ஊடாக கிழக்கின் தமிழ்பேசும் மக்களின் பலத்தைக் குறைக்கமுயற்சித்தன. "இன்று சந்திரிகா அரசு சமாதானம், தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு வழங்க அதிகாரபரவலாக்கல் போன்ற சொற்பதங்களை சொல்லிக்கொண்டு" வடக்குடன் கிழக்கு சேர்ந்து இருப்பதற்கான கருத்துக் கணிப்பை கிழக்கில் மட்டும் நடத்தி படிப்படியாக வந்த அரசுகள் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை கூறுபோடும் திட்டத்தை அரங்கேற்ற முயற்சிக்கின்றது. இக்கூறுபோடுவதற்கு ஆலோசனைகளை வழங்கி, தமிழ் முஸ்லிம் மக்களுக்குள் குரோதம் வளர்க்க முஸ்லிம் மக்களை கொன்று குவித்து தங்களில் யார் Madamன் முகம் கோணாமல் நடக்கின்றார்கள் என்பதை நிரூபிக்க கூட்டணி, ஆயுதம் தரித்த பாராளுமன்ற குழுக்கள் போட்டி போட்டு செயல்படுகின்றார்கள். ஆயுதம் தரித்த குழுக்களில் சில அரச படைகளுடன் சேர்ந்து இராணுவ வழிகாட்டல், ஆலோசனைகள், வழங்கியும், தமிழ்தேசத்துக்கு எதிராக அரசபடையுடன் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டும், பாராளுமன்றத்தில் சந்திரிகா அரசு கவிழாமல் முட்டு கொடுத்துக் கொண்டு தாங்கள் கிழக்கை பிரிப்பதற்கு நடத்தும் கருத்து கணிப்பிற்கு ஆதரவு இல்லை என தெரிவித்து தமிழ் மக்களுக்கு "காதில் பூ வைக்கின்றார்கள்".

இலங்கை முடியாட்சியில் இருந்து பௌத்த, சிங்கள குடியரசு ஆனபோது தயாரிக்கப்பட்ட புதிய அரசியல் சாசனத்திற்கு (1972) தமிழ் பிரதேசத்தில் இருந்து சென்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தபோது தன்மானம், சுயகௌரவம் அற்றவர்கள், தமிழ் இனத்தை விற்று பிழைப்பு நடத்தும் அரசியல் வாதிகள் என்று மேடை.. மேடையாக கூறியவர்கள், இன்று 72 அரசியல் அமைப்புக்கு வாக்களித்தவர்களிலும் கேவலமாக எந்தவித உணர்வு அற்றவர்களாக தமிழ் தேசத்துக்கு துரோகம் இழைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். தமிழ் காங்கிரஸ் தொடக்கம் கூட்டணி வரையும் மேடை பேச்சுகளை கேட்டு அப்படியே நம்பிய காலம் மாறி இன்று தமிழ் தேசியபோராட்டத்தை யார் நடத்துகின்றார்கள். யார் துரோகமாக நடத்துகின்றார்கள் என்பதை விளங்கி கொள்ளும் பக்குவம் மக்கள் பெற்று இருக்கின்றார்கள்.

பதவிக்கு வரும் அரசுகள் எமது தேசத்தை ஒடுக்குவதில் மாறி மாறி தங்கள் கை வரிசையைக் காட்டும் நடைமுறையைக் கொண்டுள்ளன. இனிவரும் எந்த அரசு ஆனாலும் பெரும்பான்மை மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வனவாகவே இருக்கும். ஒவ்வொரு முறை வரும் அரசுகளில் நம்பிக்கை வைத்து நாங்கள் காலத்தை போக்காமல் "எங்கள் விடுதலையை எங்கள் கையில் எடுப்போம்". இங்கு தமிழ் தேசத்தின் விடுதலை என்பது ஸ்ரீலங்கா அரசின் ஒடுக்கமுறைக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பது மட்டும் எமது போராட்டமில்லை. இராணுவ போராட்டத்துடன் எமது தேசத்தின் விடுதலையை பெறுவதற்கான அரசியலை முன்னிறுத்துவதனூடாகத்தான் எமது போராட்டத்தை சரியான வழியில் எடுத்து செல்ல முடியும். ●

**சந்தியா**

படிப்பகம்

www.padippakam.com



# இனியும் சூல் கொள்



## 23ஆவது இலக்கியச் சந்திப்பு மலர் விமர்சனம்

இந்த மலர் பற்றிய விமர்சனத்தை எழுதுவதற்கு முன் என்னை நானே சிறிது ஆராய்ந்து கொனேடன். எடுத்த மாத்திரத்தே தராதரம் பார்க்கக்கூடிய மலராக இது இருக்கவில்லை. ஒன்பது வருடங்களாக இலக்கியத்தளத்தில் சமர்கள், சதிகள் பல கடந்து முன்னேறிக் கொண்டிருக்கும் ஒரு இலக்கியச் சந்திப்பின் உழைப்பு மட்டுமல்ல உதிரமும்தான்.

'இனியும் சூல் கொள்' என்ற இன்றைய சூழ்நிலைக்கேற்ற பொருத்தமான தலைப்பு, எதிர்காலம் பற்றிய அறைகூவல் என்றமைய வெளிவந்திருக்கும் இம்மலர், புகலிடச் சூழ்நிலையில் வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரிகைகள் சஞ்சிகைகளின் மத்தியில் தனக்கே உரித்தான தகுதியைப் பெற்றிருப்பது கண்கூடு. அட்டைப்படம், வடிவமைப்பு, பக்கத்திற்கு பக்கம் அதன் வேலைப்பாடுகள், ஓவியங்கள், எழுத்துக்கள் என்பன சிறந்த முறையில் ஆக்கம் பெற்றுள்ளன. வடிவமைப்பு மற்றும் பெரும்பாலான ஓவியங்களை வரைந்துள்ள கிருஸ்ணராஜாவின் பணி சிறப்புக்குரியது.

**இனியன்**

திடீரென காளான்களாய் முளைத்து பின் அடிச்சுவடே தெரியாமல் மறைந்து போன பல சஞ்சிகைகள் கூறும் சாட்சி, நிலைமை அசாதாரணம் என்பதையே. புகலிடச் சூழலில் பத்திரிகை நான்கு பெரும்பிரச்சனைகளைச் சந்திக்கிறது. பணியாற்ற விரும்பும் சூழலில் இருந்து அந்நியப்பட்ட நிலை, தெளிவாக்கப்படாத இலக்கு, ஜனநாயக விரோத சக்திகளின் நெருக்கடிகள், வசதிகள், சக்திகளின் வறுமை, இச்சூழலிலும் பல தடைகளைத் தாண்டி சூல் கொண்டிருக்கும் இம்மலர் சமூக விரும்பிகள் அக்கறைப்பட வேண்டியது.

தனது பார்வையை சமூக, பண்பாடு, கலாச்சார, அரசியல் தளங்களில் விரித்திருப்பதுடன் நமது தேசிய விடுதலைப் போராட்டம், தாயக மற்றும் புலம்பெயர் சூழலில் நமது மக்களின் நிலை பற்றிய குறிப்பான தேடலுடனும் மலர் தன்னை நிலைப்படுத்தியுள்ளது. 12 பல்வேறு தரப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள். நமது மக்களின் வாழ்நிலையை விளக்கும் 15 கதைகள் 24 கவிஞர்களின் கவிதைகள், அரசியல் மற்றும் பெண்ணுரிமைக் கட்டுரைகள் என்று மொத்தம் 63 ஆக்கங்களுடன் வெளிவந்துள்ளது.

### ஆக்கங்கள் பற்றி
(தெரிந்தெடுத்த சில)

ஆசிரியர் குழு தலையங்கத்தில், அவர்கள் எதிர்கொண்ட எதிர்கொள்கின்ற நெருக்கடிகளையும் அதனூடே அவர்களின் வளர்ச்சியையும் சுட்டுவதுடன், அடக்குமுறையின்பால் தாங்கள் கட்டுப்பட்டவர்களல்ல என்பதையும் சுட்டி நிற்கின்றனர். ஓரிடத்தில் இவர்கள் குறிப்பிட விரும்பும் 'இலங்கையின் யுத்த வெறியர்கள்' யார் என்பது விளங்காத ஒன்று.

தொடர்ந்து வரும் 'துடைப்பானின் குறிப்புகள் நமது சமூகத்திடையே அரங்கேறும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக அறைகூவல் விடுவதுடன், நமது சமூகத்தின் அநீதிக்கெதிராக ஒன்றுகூடா அவலத்தையும் புகலிட தமிழ் பேசும் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் பற்றி மௌனம் சாதிக்கும் அ.மார்க்ஸின் சந்தர்ப்பவாதத்தின் மீதான ஒரு நியாயமான சாடலுடன் ஆக்கம் முடிவடைகிறது.

சே.யோகராஜாவின் 'இலங்கையின் கவனிக்கப்படாத கவிதைப் பாரம்பரியம்' எனும் ஆக்கம், ஈழத்துக் கவிதைப் பாரம்பரியத்தில் கல்வியறிவு படைத்த மேட்டுக்குடியின் கவிதையே அந்நியப்பட்டிருந்தமைக்கு மாறாக படிக்காத பாமரரின் குறிப்பான மட்டக்களப்பு கிராமங்களில் இருந்து வெளிவந்த கவிதைகளைத் தொகுத்தளித்திருப்பது ஈழத்துக் கவிதை உலகிற்கு ஒரு நல்ல பணி.

பெண்ணுரிமை பற்றி பல்வேறு வகையான கட்டுரைகள் ஆய்வுகள் வெளிவந்திருந்தபோதும் 'இலங்கையின் அரசியல் விடுதலைப் போராட்டத்தில் முன்னுரிமை மறுதலிக்கப்பட்ட தமிழ்ப் பெண்கள்' என்னும் சி.புஸ்பராஜாவின் ஆக்கம், குறிப்பாக ஈழத்தமிழர்களின் அரசியல் அரங்கில் பெண்கள் புறக்கணிக்கப்பட்டு வந்தமை, அதற்கான ஆணாதிக்க அடிப்படை என்பவற்றை விளக்குவதுடன் ஆரம்பகால தமிழ் அரசியல் கட்சிகள் தொடங்கி இன்று வரையுள்ள விடுதலை இயக்கங்கள் வரை குறிப்பான வரலாற்று ஆதாரத்துடனான ஒரு தொகுப்பு பயன்பாடுடையது.

சி.சிவசேகரம் எழுதியுள்ள 'யாருடைய கலைகள் யாருடைய கடவுள்கள்' என்ற சமூகாய்வுக்கட்டுரை? ஏமது சமூகத்தில் சைவமும் தமிழும் என்ற கோசம் எந்தளவிற்கு கலைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதையும் பரதநாட்டியத்தினதும் கர்நாடக இசையினதும் விரும்பப்படாத வளர்ச்சி மற்றும் இவற்றிற்கான சாதிய அடிப்படை, தலைமையளித்த ஆறுமுக நாவலர் பற்றிக் குறிப்பிடப்படுவதுடன், 'தமிழரல்லாத கடவுளரைத் தமிழில் வழிபடுவதிற் கூடிய தமிழ்த்தன்மை உள்ளது" என்கின்ற மிக மாறுபட்ட ஓர் உண்மையையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

'யாழ்ப்பாணக் கூத்துக்களும் சமூக வரலாற்று பின்புலங்களும்' என்ற சு.தில்லை நடேசனின் ஆக்கம், உருவாக்கம் பெற்று வரும் யாழ்ப்பாண இலக்கிய வரலாற்றிற்கு ஒரு சேர்மானம். யாழ்ப்பாண வரலாறு என்பது இன்னும் முழுமை பெறாத ஒன்று. இன்றுள்ள அரசியல் சமூக சூழல் அதை ஒரு கனவாகவே ஆக்கியுள்ளது. இது போன்ற கூத்துக்கள் பற்றிய தேடல் வரவேற்கப்பட வேண்டிய முயற்சி.

சில முன்னுரைகள் என்ற நீர்கொழும்பு முத்துலிங்கத்தின் எழுத்துரைகள், கவிஞர்களைப் பற்றிய ஆய்வு முயற்சி புதியவகை வடிவமைப்பு கொண்டது. ஜெயக்காந்தன், எஸ்.பொன்னுத்துரை என்று தொடங்கி ஈழத்து கே.டானியலில் முடிக்கிறார் ஆக்கதாரர். ஜெயகாந்தனை இவர் சந்தித்திருப்பது ஒரு சர்ச்சைக்குரிய விடயம்தான். அரசியலில் அடக்குமுறை என்கின்ற கோரமுகமும் இலக்கியத்தில் மக்களின் தோழன் என்ற பாவனை முகமும் கொண்ட ஜெயகாந்தன் போன்ற ஆபாச அழிவுவாத இலக்கியவாதிகள் முற்போக்கு இலக்கிய வட்டங்களில் இருந்து புறந்தள்ளப்பட வேண்டியவர்கள். "ஈழத் தமிழ்ப் பெண்களை இந்திய ராணுவம் கற்பழிக்கின்றது என்று எவன் சொல்கிறானோ அவன் வீட்டுப் பெண்களை கற்பழி, இந்திய ராணுவம் ஈழத்தில் வீடுகளில் கொள்ளையடிக்கிறது என்று எவன் சொல்லுகிறானோ அவன் வீட்டில் கொள்ளையடி" என்று சென்னைப் பொதுக் கூட்டத்தில் ஊளையிட்ட இலக்கியவாதி ஜெயக்காந்தனை ஈழத்தமிழன் உதாரணத்திற்கு கூட எடுப்பது இழிவு.

கலாமோகன் எழுதியுள்ள 'கனி' சிறுகதை மலரில் எவ்வகையில் பிரசுரமாகியுள்ளது என்பது புரியாத விடயம். திருட்டுக் காதலை ஆபாசத்தால் விபரித்து அதற்கு வேதாகமத்தையும் துணைக்கழைத்து ஒரு மன்மதக் காவியம் படைத்துள்ளார் ஆக்கதாரர். இலக்கியம் என்பது சமுகத்தின் கண்ணாடி என்பதனாலேயே சமூக நிகழ்வுகள் அனைத்தையும் அப்படியே எழுதிவிட முடியாது. ஆசிரியர் கள்ளக் காதலின் நண்பனா? அல்லது ஒரு தாரத்தின் எதிரியா? என்பது அவர் சொல்லித்தான் அறிய வேண்டும்.

வே.மு.பொதியவெற்பனின் 'பித்தனும் பிரேமிளும் சுடரேந்திய தொடரோட்டம்' என்ற ஆக்கம், திறமைமிக்க கவிஞன், மோசமான தத்துவவாதி என்கின்ற ஒருவரைப் பற்றிய ஆய்வு. பிரேமிளின் கவிதை யின் பாற்பட்ட திறமையை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. அதே நேரம் அவரது 'இருத்தலும்..' எனும் தத்துவ அடிப்படை கொண்ட படைப்புகள் சமுகத்திற்கு எவ்வகை பயன்பாடு கொண்டவை என்பதே பிரச்சனை. பிரேமிளை மேதை என்ற நிலைக்கு உயர்த்துவதன் மூலம் பொதியவெற்பன் தன்னை தமிழகத்தின் மிகைப்படுத்தல் எனும் பண்பாட்டின் பிரதிநிதியாக அறிவித்துக் கொள்கிறார்.

புகலிடப் பிரச்சனைகள் குறித்து தி.உமாகாந்தனின் 'புகலிடமும் புதிய நூற்றாண்டும்', ஆத்மனின் 'தலைமுறைகளின் முரண்பாடு' எனும் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. புகலிடங்களில் நம்மவர்க்கும் புறநிலைக்கும் நிலவும் பாரிய முரண்பாடுகளையும், அவற்றுடன் ஒத்துழைக்க முடியாது, ஈடு கொடுக்க முடியாது படும் இடர்களையும் எடுத்துக் காட்டுவதுடன், வேற்றுமொழி, நவீன விஞ்ஞான அறிவியல்களை நம்மவர்கள் சுவீகரிக்க முடியாதவர்களாய் தென்னிந்திய பிற்போக்குத் தளங்களுக்குள் மீண்டும் சரணடைவதையும் ஆதங்கத்துடன் உமாகாந்தன் எடுத்துக் காட்டியுள்ளார். உண்மைக் கதையின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ள 'தலைமுறைகளின் முரண்பாடு' புகலிடச் சூழலில் வளர்ந்து வரும் சந்ததிக்கும் இருப்புக் கொண்டுள்ள பகுதியினருக்குமான முரண்பாட்டை குறிப்பான எடுத்துக்காட்டுக்களுடன் வெளிப்படுத்தியுள்ளது.

தமிழ் தேசிய விடுதலை போராட்டம் பாலான அக்கறை, ஜனநாயக விரோத எதிர்ப்பு, புகலிடப் பிரச்சனைகள், பெண்ணியம், புதிய வரலாற்றுத் தேடல்கள், தலித்தியம், மொழியியல் என்று ஒரு விரிந்த தளத்தில் நின்று பேசும் இம்மலர். இன்றைய காலகட்டத்தின் தேவைகளில் ஒன்று. ●

மலர் விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு: France, Tel- 3986 3130

---

- ✪ புகலிடச் சூழ்நிலையில் வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரிகைகள் சஞ்சிகைகளின் மத்தியில் தனக்கே உரித்தான தகுதியைப் பெற்றிருப்பது கண்கூடு.
- ✪ நமது தேசிய விடுதலைப் போராட்டம், தாயக மற்றும் புலம்பெயர் சூழலில் நமது மக்களின் நிலை பற்றிய குறிப்பான தேடலுடனும் மலர் தன்னை நிலைப்படுத்தியுள்ளது.
- ✪ தமிழ் தேசிய விடுதலை போராட்டம் பாலான அக்கறை, ஜனநாயக விரோத எதிர்ப்பு, புகலிடப் பிரச்சனைகள், பெண்ணியம், புதிய வரலாற்றுத் தேடல்கள், தலித்தியம், மொழியியல் என்று ஒரு விரிந்த தளத்தில் நின்று பேசும் இம்மலர். இன்றைய காலகட்டத்தின் தேவைகளில் ஒன்று.


*For all legal services relating to*

**IMMIGRATION, ASYLUM APPLICATION, CIVIL LITIGATION, CRIMINAL LITIGATION & POLICE STATION WORK**

**RANJIT & CO**

Ranjit & Co Solicitors
176 Mitcham Road, London SW 17 9NJ
Tel: 0181- 767 9717


படிப்பகம்

www.padippakam.com



# ஜெயசிக்குறு

(வேதாளம் சொல்லும் கதை)



தனது முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் ஆளில்லாத உளவு விமான மூலம் உடல் இருக்கும் இடத்தைக் கண்டு கொண்டான். எப்படியும் உடலைக் கைப்பற்றுவதாக முடிவெடுத்துக் கொண்டு, ஏற்கனவே கண்ணிவெடியில் சிதையுண்ட உடலையும் பொருட்படுத்தாமல் தாண்டித்தாண்டி மரத்தடியை வந்தடைந்தான். இக்கதை பலநூறு வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை எடுக்க முடியாமல் போவதால் உடல் வேறு உப்பி வெடிக்கும் அளவுக்கு இருந்தது. முறைப்படி பார்த்தால் இன்று மண்ணோடு மண்ணாகியிருக்க வேண்டிய உடல் கண்ணிவெடியில் சிக்கி, .கை கால்கள் சிதையுண்டு மரத்தில் மேல் தொங்கினாலும் எந்த வித மணமும் இல்லாமல் இருப்பது கண்டு இது மனிதக்குண்டாக இருக்குமோ என ஒரு கணம் சிந்தித்தாலும் மனதைத் தளரவிடாது மரத்தில் ஏறி உடலை தடியால் தூரே நின்று தட்டி விழுத்தினான். கீழே விழுந்த உடல் வெடிக்காது கண்டு "அப்பாடி வெடிக்கவில்லை" என்று உரத்துச் சத்தமிட்டான்.

பின் கீழே இறங்கிவந்து உடலைத் தூக்கி மயானத்தை நோக்கி நடக்கையில் "என்ன இன்று இன்னும் வேதாளத்தைக் காணவில்லையே" என்று நினைத்தவனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வேதாளம் எள்ளி நகைத்தது.

வேதாளத்தின் குரல் மட்டும் கேட்டது. உருவத்தைக் காணவில்லை. தொடர்ந்தும் ஒரு எட்டு வைத்தான். மீண்டும் அதே குரல்!!

பயந்த விக்கிரமன் உடலைக் கீழே போட்டான். அதனுள்ளே இருந்து வேதாளம் வெளியே வந்தது.

இப்போதெல்லாம் வேதாளங்கள் மனித உடலில் சர்வசாதாரணமாக புகுந்து விடுகிறது என நினைத்த விக்கிரமன், வேதாளத்தைப் பார்த்தான். அதே உருவம். எந்த மாற்றமும் இல்லை. கண்களில் மட்டும் பயம் தெரிந்தது வேதாளமே பயப்படும் அளவுக்குத்தான் காடுகள் இருக்கிறது என்பதும் அவன் அறியாததல்ல, ஆட்லறி பீரங்கி தாக்குதல்களினால் வேதாளம் உறங்கும் மரங்களும் கொப்புக்களும் வேறு சிதையுண்டு இருந்தன.

குறுவாளுடன் ஆரம்பிக்கப்பட்ட மீட்பு, இன்றுவரை தொடர்வதுக்கு காரணமே இந்த வேதாளத்தின் இடஞ்சல் தான் என்று நேராகவே குற்றம் சாட்டினான் விக்கிரமன்.

எள்ளி நகைத்த வேதாளம், தான் அமர நல்ல இடம் கிடைக்கிறதா என்று மரத்தை சுற்றி வந்தும் எந்த வசதியான இடமும் கிடைக்காததால் வெறுப்புற்றதுடன் செல்அடியினால் சிதையுண்ட கொப்புக்களும் மரங்களும் ஒரு பயத்தை ஏற்படுத்தினாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் இப்போதும் தனது பலம் தான் உயர்ந்திருக்கிறது என்ற போர்வையில்

"நீ கேட்கவோ, குற்றம் சாட்டவோ கூடாது நான் தான் சொல்லவும் கேட்கவும் உரிமையுடையவன் சரியோ தவறோ நான் சொல்வதைத்தான் நீ செய்ய வேண்டும் செய்ய வேண்டிய கட்டாயமும் இருக்கிறது, ஏனிந்தக் கட்டாயம் வந்தது என்பதை விளக்க வேண்டுமானால் கட்டாயத்தேவைக் காக நடந்த படையெடுப்பு ஒன்றின் கதையை உனக்குச் சொல்லித் தான் ஆகவேண்டும்" எனச்சொல்லி விட்டு நகைத்தது வேதாளம்.

> யாழ் வன்னியடங்க கிழக்கு முகமாக ஒரு இனத்தின் தளபதியும், தெற்கு முகமாக ஒரு இனத்தின் தளபதியும் தமது கைக்குள் நாட்டை வைத்திருந்தனர்.

விக்கிரமன் அப்படி என்ன கதை என்பது போல ஆவலாய்ப் பார்த்தான்.

வேறொரு வேதாளமொன்று ரெலிபோன் அடித்து ஒரு கதை சொல்லும்படி வேறு கேட்டது. இப்போது உனக்காக வேறு கதை சொல்ல வேண்டி இருக்கிறது. இருவருக்கும் பொதுவாக ஒரு கல்லில் இரு மாங்காய் என்று சொல்லி பெருமைப்பட்டுகொண்ட வேதாளம் வாலை நீட்டி அமர்ந்த வண்ணம் கதை சொல்லத்தொடங்கியது.

இலங்காபுரி, இலங்காபுரி என்ற தீவக நாடு ஒன்று இந்து சமுத்திரத்தில் இருந்தது.

கதை சொல்லத் தொடங்கையிலேயே விக்கிரமன் குறுக்கிட்டான். இலங்காபுரி என்று ஒரு நாடா? இரண்டு நாடா" என்று புரியாமல் கேட்டான் விக்கிரமன்.

"இப்படி இடையிடையே கேள்வி .கேட்டால் நான் எதுவும் சொல்லப் போவதில்லை" என்று எழுந்த வேதாளத்தைச் சமாளித்து இருத்தினான் விக்கிரமன்.

பகுதிபகுதியாக வேறுபட்ட இரு இன மன்னர்கள் பல நாடுகளை ஆண்டார்கள். இதில் அநுராதபுரம், கண்டி, யாழ் இராசதானி, வன்னி என்று பல இருந்தாலும் இறுதியில் இரண்டு இனத்துக்கிடையான போர் என்பதால் தான் அப்படிக்கூறியதாக விளக்கியது வேதாளம்.

தீவகத்தில் இருந்த பலநாடுகளைக் கைப்பற்றிய வெளிநாட்டவர்களில் இறுதியாக வந்த ஆங்கிலேய இனம்தான் எல்லா இராசதானிகளையும் விட்டு ஒரு குடைக்கீழ் ஆட்சியைக் கொண்டு வந்தது.

பல காலங்களின் பின் நெருக்குதல்களினால் விட்டுச் சென்றபின் இனங்களுக்கிடையே யான அடக்குமுறையில் மீண்டும் இருபிரிவுகளாக நாட்டை ஆள விருப்பப்படும் போது தான் பிரச்சனையே அதிகமாயிற்று.

யாழ் வன்னியடங்க கிழக்கு முகமாக ஒரு இனத்தின் தளபதியும், தெற்கு முகமாக ஒரு இனத்தின் தளபதியும் தமது கைக்குள் நாட்டை வைத்திருந்தனர்.

கதை எங்கு நிக்கிறது என்பதைப்புரிந்து கொண்ட விக்கிரமன் தூரத்தில் விழுந்து வெடிக்கும் செல்களின் சத்தம் கேட்டுக் கோபமுற்றாலும் அந்தச் சத்தங்களுக்கு மத்தியிலும் கதை கேட்பதிலேயே கவனத்தைச் செலுத்தினான்.

குரு குலத்தில் கடமை புரிந்த உபாத்தியார் வழி வந்த திராவிடன் ஒருவனே மக்களால் போற்றப்பட்டு யாழ் இராசதானியையும் தெற்கே வன்னித்தலைநகர் வரையும் கிழக்கே திருகோணமலை மட்டக்களப்பு வரையும் தனது ஆளுமையைக் கொண்டிருக்கையில், தெற்கே தனது ஆளுமையை விரிவாக்க விரும்பிய ஆரியத்தளபதி ஒன்றைக் கால் மாமன் தலுவத்தையும் போரில் பேரார்வத்துடன் ஈடுபட்டு வந்தான்.

இவ்வாறு இருக்கையில் முன்னேறிப்பாய்ச்சல், சூரியக்கதிர் தனது போர் நடவடிக்கை மூலம் மீண்டும் ஒரு பகுதி நிலத்தை தன்வசம் கொண்டு வந்தான் எனினும் அவனால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. காலத்துக்குக் காலம் பெரும் இழப்புக்களையும் சந்தித்து வந்தான்.

பெரும் படைகளைக் கொண்டு வன்னியில் இருந்த யாழ் இராசதானி வரை தரைப்பாதை திறப்பதற்கான போர் நடவடிக்கையே ஜெயசிக்குறு ஆகும்.

ஏற்கனவே மேற்கொண்ட போர் நடவடிக்கைகளிலேயே பெரும் வெற்றியடைந்ததாகக் குறிப்பிட்டு விட முடியாது. யாழ்-வன்னி பாதை திறப்பில் வெற்றியடைய முடியாது என்றும் பெரும் இழப்புக்களைச் சந்திக்க வேண்டிவரும் என்றும் ஆய்வாளர்கள் எச்சரித்த போதும் ஒன்றைக்கால் மாமன் ஏன் ஜெயசிக்குறு என்ற போரை ஆரம்பித்தான். அப்படியான கட்டாய தேவை என்ன? "ஒன்றைகால் மாமன் தலுவத்தை மன்னார் வழிப்பாதை திறந்தாலும் எதிர்பார்த்த ஒன்று நடக்கவில்லை அது என்ன?"

"அதேபோல் ஜெயசிக்குறு போருக்கு முதல் நாள் விமானத் தளங்களின் மேல் கரிகாலன் படையின் தாக்குதலில் அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக நடந்தது என்ன?"

"இந்த ஜெயசிக்குறு படை நடவடிக்கைகளில் யாருக்கு வெற்றி நிச்

Raj Puspanandan

TRUST TRAVEL LIMITED
3RD FLOOR
205 WARDOUR STREET
LONDON W1V 3FA
ENGLAND

ATOL 74234
IATA 91245770

TEL: 0171 287 3200, FAX: 0171 287 3111

படிப்பகம்

www.padippakam.com



சயம்?"

"இவற்றுக்கான பதிலை நீ கூறாவிட்டால் உனது தலை செல் வெடித்துச் சிதறுவதுபோல் சிதறும்" எனக்கூறிவிட்டு விக்கிரமனைப் பார்த்தது.

கேள்விகளைக் கேட்ட விக்கிரமன் முகத்தில் ஈயாடவில்லை வானத்தை வெறித்த வண்ணம் விக்கிரமன் அமர்ந்திருந்தான் வெற்றி யாருக்கு என்ற கேள்வியில் விக்கிரமனை மடக்கி விடலாம் இனி யாரும் இங்கு வந்து தொந்தரவு தரமுடியாது என்று வேதாளம் முழுமையாக நம்பியது. பதில் சொல்லாவிட்டால் இன்றோடு இவனது தலை போய்விடும் என்று வேதாளம் நினைக்கையில் தலைக்கு மேலால் போன ஒரு செல் முன்னால் இருந்த சேற்றுக் குட்டையில் விழுந்தது.

''நாம் செத்தோம்'' என்று சொன்ன வேதாளம் உடனே விழுந்து படுத்துக்கொண்டது. செல் வெடிக்கவில்லை.

சகதியில் விழுந்ததால் தான் வெடிக்கவில்லை என்று கண்டு கொண்ட வேதாளம், விக்கிரமனை தலை தூக்கிப்பார்த்தது.

எதுவுமே நடக்காததுபோல் கையை அங்குமிங்குமாக அசைத்தபடியும் வானத்தைப் பார்த்தபடியும் வெற்றியின் போக்கை எடை போட்டுக் கொண்டிருந்தான் விக்கிரமன்.

எப்படியும் இவனை பதில் சொல்லவிட்டால் மீண்டும் வந்து தொல்லை தருவான் என்ற பயம் வேதாளத்துக்கு இருந்ததால் "இந்தப் படை நடவடிக்கை ஆரம்பித்த பின் வவுனியா - கிளிநொச்சி பாதையைத்தவிர யாழ்? மட்டக்களப்பு போன்ற இடங்களில் ஏற்பட்ட தாக்குதல்களில் ரத்வத்தையின் படையில் சுமார் 300 பேர் வரை இறந்து இருக்கிறார்கள்" என்று கூறிவிட்டு மீண்டும்.

''தாண்டிக்குளம், பெரியமடு இழப்புக்களையும் சேர்த்தால் வேதாளத்தின் பதில்கள் தன்னைக் குளப்புவதற்காகவே என்று புரிந்து கொண்ட விக்கிரமன், சற்று நேர மெளனத்தின் பின் சொல்லத்தொடங்கினான்.

"போர் செய்ய வேண்டிய கட்டாயத்தேவை வந்ததுக்குக் காரணம் ஒன்று.

கடல் பாதையின் சிக்கல், இழப்பு, செலவீனத்தைக் குறைக்க கட்டாயமான தரைப்பாதை தேவை."

> கட்டாயம் தன் பதில் கேட்க வேதாளம் வரும். தான் வராவிட்டாலும் யாரையாவது அனுப்பும் என்று நினைத்த விக்கிரமன் தான் கூட இந்த நினைப்பில் இரண்டு மாங்காய் அடித்துவிட்டதாக நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

சொல்லிவிட்டு வேதாளத்தைப் பார்த்தான். சரி என்பது போல் வேதாளம் பேசாமல் இருந்தது.

இரண்டாவது,

விமானத்தளத்தின் மீதான செல் வீச்சு சுவர்களை 30 கிலோமீற்றருக்காவது அப்புறப்படுத்த வேண்டிய கட்டாயம் அல்லாவிடில் வவுனியா இராணுவத்தளமே கேள்விக்குரியதாகிவிடும்.

வேதாளத்துக்கு இவனின் பதில்கள் பயத்தை அளித்தது எல்லாக் கேள்விக்கும் விடை சொல்லி விடுவானோ? ரத்வத்தை படை எதிர்பார்த்து நடக்காதது ஒன்றல்ல? இரண்டு என்று பீடிகையோடு விக்கிரமன் ஆரம்பித்தான்.

ஒன்று, மன்னார் வழியில் எதிர்க்க வந்தால் பலவழிகளில் படையை இறக்க உதவி செய்ய வழி இருக்கும் அதே நேரம் திராவிடர் படையை பெருமளவில் அழிக்கவும் முடியுமென்பது!

இரண்டாவது, அவ்வாறு நகர்ந்து கொண்டிருக்கும்போது கிளிநொச்சி பாதையையும் நோக்கி முன்னேறுவது! ஆனால் திராவிடர் படையோ வேண்டுமானால் மன்னாருக்கு பாதை திறந்து காவல் இரு என்பது போல விட்டுவிட்டார்கள்.

சரி என்று ஆமோதித்த வேதாளம் அப்படியானால் திராவிடர் நினைத்து நடக்காதது என்ன?

போருக்கு முதல் நாளில் ஏவிய ஆட்லறிக்குக் காரணம், எங்களிடம் இப்போது கனரக ஆயுதமும் இருக்கு. ஆகவே கிளிநொச்சிப் பாதைக்கு வரவேண்டாம் இழப்பு வரும் என்று ஒன்றைக்கால் மாமனை பயப்படுத்த செய்த யுக்தி ஒன்றைக்கால் ரத்வத்தை எடுத்த விதமோ "அடா ஆட்லறியும் இருக் கிறது, விட்டால் வவுனியாவிலும் இருக்கமுடியாதே என்ற கட்டாய படை நகர்வுத் தேவை. இது தானே நீ கதை சொன்னதற்குக் காரணம் என கொழுக்கி போட்டான் விக்கிரமன்.

வேதாளம் மீண்டும் நகைத்தது.

''இதற்கு பதில் எப்படியும் சொல்லி விடுவாய் என்று எனக்குத் தெரியும்" என்று சொன்ன வேதாளம் எனது இறுதிக் கேள்வி! என்று சொல்லி நிறுத்தியது.

''ஜெயசிக்குறுவில் யாருக்கு வெற்றி அதுதானே!

பொறு சொல்கிறேன்'' என்றுவிட்டு மீண்டும் யோசனையில் அமர்ந்தான்.

பதில் சொல்லாமல் அவன் காலம் கடத்துவதைக்கண்ட வேதாளம் ''இன்னும் மூன்று எண்ணுவதற்குள் சொல்லாவிட்டால் உனது தலை வெடித்துவிடும்'' என்று சொல்லி விட்டு,

"ஒன்று"

''இரண்டு' என்று எண்ணத் தொடங்க, விக்கிரமன் குறுக்கிட்டான்.

''நீ பதில் சொல்லாவிட்டால் தானே தலை வெடிக்கும் என்றாய். எவ்வளவு நேரத்துக்குள் சொல்லிவிட வேண்டும் என்று முன்பே நிபந்தனை விதிக்கவில்லையே'' என்று தனது தாமதத்துக்கு நியாயம் உண்டு என வாதிட்டான். வேதாளம் தனது தவறை உணர்ந்து நாக்கை கடித்து "சரி சரி விரைவில் சொல்லு" என்று எழுந்து இங்கும் அங்கும் திரிந்தது.

காற்றில் உரசி வந்த செல் ஒன்று அண்மையில் விழுந்து வெடிக்க வேதாளத்தை தூக்கி 20 யார் தூரத்தில் எறிந்தது.

இது எதையுமே கண்டு கொள்ளாமல் மரத்தின் பின்னால் சிந்தனையிலேயே விக்கிரமன் இருந்தான்.

இப்படியே தன்னை இங்கு வைத்திருந்து விக்கிரமன் அழிக்கப் பார்க்கிறான் என வேதாளம் நினைக்கவும் மேலும் செல் வீச்சுக்கள் காட்டை நோக்கி அதிகமாகவும், வேதாளத்துக்கு ஒரு ஐடியா தோன்றியது.

விக்கிரமாதித்தனிடம் வந்து தனது பயத்தைக் காட்டிக்கொள்ளாமல், "நீ யோசித்து யாருக்கு வெற்றி நிச்சயம் என்று முடிவெடு. நான் ஒரு அலுவல் இருக்கிறது போய் விட்டு வந்து விடுகிறேன்" என்று கூறியது. ஆம் என்பது போல தலையை மட்டும் ஆட்டினான் விக்கிரமன்.

இறுதி சிந்தனையில் இருந்த விக்கிரமன் இருபக்க வெற்றிகள் இழப்புக்கள் என்பவற்றை வேதாளத்தின் கதை மூலம் தொகுத்து பார்த்து வெற்றி யாருக்கு என்பதையும் தெளிவாக தீர்மானித்துக் கொண்டு வேதாளத்தைப் பார்த்தான். வேதாளத்தைக் காணவில்லை.

எங்கோ போய் வருவதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது.

செல்களின் தாக்கம் வேறு பலமாகவும் அண்மித்து வருவது போலவும் விக்கிரமனுக்குப்பட்டது இருந்தாலும் வேதாளத்துக்கும் பதில் கூறாமல் நகர முடியாதே!

எப்போது வருவேன் என்று நேரம் கூட கூறாமல் போய்விட்டதே வேதாளம்.

"செல்அடிக்குப் பயத்தில் போயிருக்குமோ அல்லது என்னை அதற்குள் மாட்டி விடுவோம் என்று போய் விட்டதோ'' என்று விக்கிரமன் புரியாமல் இருந்தான்.

கட்டாயம் தன் பதில் கேட்க வேதாளம் வரும். தான் வராவிட்டாலும் யாரையாவது அனுப்பும் என்று நினைத்த விக்கிரமன் தான் கூட இந்த நினைப்பில் இரண்டு மாங்காய் அடித்துவிட்டதாக நினைத்துச் சிரித்துக் கொண்டான்.


நேரம் போய்கொண்டு இருந்ததே ஒழிய வேதாளம் வரவேயில்லை.

யாரும் தனக்கும் வேதாளத்துக்கும் மட்டும் தெரிந்த கதை பற்றிக் கேட்டால் அது வேதாளம் அனுப்பிய ஆளாகவோ வேறு ஒரு வேதாளமாகவோ தான் கண்டு கொள்ளலாம் என நினைத்து விக்கிரமன் காத்திருந்தான். ●


ENGINE TEC MOTORS

339C London Road, Mitcham, Surrey CR4 4BE

We offer facilities ● Servicing, ● Clutches, ● Brakes, ● Car Electrics, ● Overhauls, ● All types of Repairs ● Pre MOT Checks



சகலவிதமான கார் திருத்த வேலைகளையும்
நம்பிக்கையானமுறையிலும், குறுகிய கால நேரத்திலும் செய்து தரப்படும்.

Contact: VEL or RAJAN

Tel: 0181 640 1230, Mobile: 0860 770945, 0860 226476


படிப்பகம்

# குஞ்சரங்கள்



ப. வி. சிறீரங்கன்

*கட்டியம்:*

தொடர்கதைக்குள் செல்வதற்கு முன் இடையிலொரு சிறுகுறிப்பு. இ்ஃது, ஒரு கிராமத்தின் கதை. ஒரு புளியமரத்தின் கதையைச் சொன்ன திரு.சுந்தரராமசாமி அவர்களின் அழகியலோடு எனக்கு உடன்பாடுண்டு. அந்த அழகியலை இதில் பயன்படுத்தவில்லை. ஆனால், அக்கதையின் வீச்சோடு, நான் மண்ணளைந்து விளையாடிய என் மண்ணின் கதைகளோடு வருகிறேன். இது ஒருகால வரலாற்றோடு உறவாடும் ஒரு ஆவணம்போல; ஈழம், புலம்பெயர் நாடு என்ற இரண்டு தளங்களில் கதை நகரும்!

சமகால மாற்றங்களோடு அந்தக் கிராமத்து மக்கள் வாழ்வியல் இயக்கத்தைச் சொல்வது என்நோக்கம். இந்த நோக்கோடு மாதா மாதம் சந்திப்போம்.

நிறைந்த நேசத்தோடு
ப.வி.சிறீரங்கன் (நூரன்பேர்க்)

## அத்தியாயம் 1

"முட்டிப்பானை காய்ந்தால்
சட்டி வயிறும் காயும்
முந்தி வந்தவள் முலையை அவிழ்ப்பாள்
பிந்திப் போவது நன்னும் முலையை"

மார்கழி 1984, சரவணைக்கிராமம்:

வானம் போர்த்திருந்த நிலம் கரைந்து கொண்டிருக்க வழி தெரிந்து பறக்கும் பட்ஷிகள் தம் இருப்பிடம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தன. வயிரார உண்பதற்காக அவை ஓயாது உழைத்துக் களையுடன் திரும்பிப் கொண்டிருந்தன.

மனிதர்களில் பலர் வெற்று வார்த்தைகளை மென்ற களையுடன் விறைப்புற்று தத்தம் வீடு நோக்கி நடையைக் கட்டினார்கள். அவர்களில் பலர் சோகமாகவும், சிலர் மகிழ்வாகவும் இருந்தார்கள்.

காலாகாலமாக கனகத்தின் வீட்டு வேம்பை இருப்பிடமாக்கிக் கொண்ட பட்ஷிகளும் வீடு மீண்டுவிட்டதாகக் குரல் கொடுத்தன. ஆனால், கனகம் மட்டும் "தன் தொப்புள் கொடியுடன் சேர்த்துக் கட்டி கருப்பையில் நீந்தப்போட்ட சிசுவைப்போல" வாழ்வுக் கடலில் நீந்தப் போட்ட தன் குஞ்சரங்களில் மூவரைக் காணாது தவித்தாள்.

வானம் இப்போது கறுப்பு நிறத்தை போர்த்துக் கொண்டாகிவிட்டது. கனகத்தின் விழிகளும் கரும் பூவை உள்வாங்கிக் கொண்டிருக்க, அவளின் மனக்கண் மட்டும் தொப்புள் கொடியாக நீண்டு கொண்டது; காலம் வேகமாக விலகிக் கொண்டது.

"டேய் ரவி அம்மா தேடிக் கொண்டிருப்பாடா.." இது கருணன்.

"என்னடா செய்ய?; இந்த மனுசனையின்னும் காணவில்லையே!.."

ரவி, தம்பிமார்கள் ஜெயாவுடனும், கருணாவுடனும் பொன்னம்பலம் மாஸ்டர் வீட்டினது படிக்கட்டுகளில் குந்தியபடி அங்கலாய்த்தார்.

பொன்னம்பலத்தார் வீட்டில் சமையல் வாசனை கமழ்ந்து கொண்டிருந்தது. ஆனால், கதிரையிலோ - சாய்மனைக் கதிரையிலோ பொன்னரைக் காணவில்லை.

பொன்னம்பலம்மாஸ்டர் என்றால் சுற்று வட்டாரத்துக்கே தெரியும் மனுசன் கண்டிப்பானவரென்று. ஆனால், கனகத்தின் குஞ்சுகளுக்கு அவர் நெறிமீது நல்ல அபிப்பிராயமில்லை.

இருக்காதா பின்னே?

இதோ குஞ்சுகள் காவல்கிடக்க மனுசன் வீட்டிலில்லாமல் உலாத்துக்குப் போய்விட்டாரே!

கடந்த நான்காண்டிற்கு முன்பு தாம் வாத்தியார்· வேலையிலிருந்து ஓய்வு பெற்றார் பொன்னம்பலம் மாஸ்டர். கடுமையாக உழைத்த மாஸ்டருக்கு சும்மாயிருப்பது, வீட்டில் முடங்கிவிடுவது கஷ்டமாக இருக்க - குத்தகைக்கு விட்டிருந்த தன் சொந்த முதிசக் காணிகளை இப்போது 'தானே' பயன்படுத்தி வருகிறார்.

இந்த ஆண்டு, கனகத்தின் குஞ்சுகள் அவருக்கு தோட்டம் செய்யும் கூலிகளாக..

கடுமையாக தோட்டத்தில் மாரடித்த குழந்தைகள் பொன்னம்பலம்மாஸ்டரின் வருகைக்காக - அவர் வீட்டின் படிக்கட்டுகளில் குந்திக்கொண்டு காவலிருக்கிறார்கள்.

ரொம்ப ரொம்ப சகிக்கமுடியாது.

மாஸ்டர் வந்து ஐந்தோ, பத்தோ குழந்தைகளுக்குக் கொடுப்பார். இது தாம் தினமும் வழமையாக இருந்தது. ஆனால், இன்று எல்லாம் தலைகீழ். மாஸ்டரைக் காணாது அவர்கள் தவித்தார்கள்.

அவர்களின் வயிற்றின் அந்தரம் மாஸ்டருக்குப் புரியப் போவதில்லை. அல்லது, சமையல் தட்டுக்குள் இருந்து வாசனை வரும்படி சமைத்திருக்கும் அவர் மனையாளுக்கோ புரிவதற்கு வாய்ப்பிருக்குமோ?

இல்லை.

நேரம் இரவு எட்டைத் தாண்டியது.

"என்ர குஞ்சரங்கள் இவ்வளவு நேரம் நிக்காதுகளே!.." கனகம் மனதில் பயம் புளியாகக் கரைந்தது. அடுப்பில் நெருப்பெரியவில்லை. வேலைசெய்து விட்டு வரும் குழந்தைகளுக்கு சமைக்க முடியவில்லை. அவர்கள் கொண்டு வரும் காசில் இனி எதுவுமே வேண்டிக்கொள்ள முடியாது; மணியோ எட்டைத் தாண்டிவிட்டது.

பொழுது சாய்வதற்கு முன் கற்பனையில் மூழ்கிய கனகம், காய்ச்சியாறிய பாலை மீண்டும் அடுப்புக்கல்லில் வைத்து நெருப்பெரித்தாள்.

டொக்கு, டொக்கு காலடிச் சத்தம் கேட்டுக்கொண்டது அவள் செவிகளுக்கு. ஓடிப்போய் முற்றத்தை நோட்டமிட்டாள்; மனம் மகிழ்வில் பொங்கியது. கூடவே பாற்சட்டியும் பொங்க ஓடிப்போய் இறக்கி வைத்து பேணிகளில் வாற்றாள்.

கால்முகம் கழுவியாச்சு. திருநீறும் பூசியாச்சு.

படையாக பாய்ந்து சென்று அடுப்படியில் சென்றி கட்டினார்கள். பட்டை, பட்டையாக விபூதியணிந்திருந்த கனகத்தின் குஞ்சுகள், அவளுக்கு திருஞானசம்பந்தரை மூன்று உருவங்களாக கண்முன் நிறுத்தினார்கள்.

"அம்மா, ணே..ய்..ய் ஜெயாட்டை சுண்டை வேண்டித்தாண.." கருணன், பால் காச்சிய சட்டியில் பாதி கேட்டான்.

"நான் தரமாட்டன் போடா!; மனுசன், இண்டைக்கு உங்களை விட ரெண்டு ஊடு கூடக் கொத்தினனான். அறுந்துபோன பொன்னன் கெதியா வீட்டை வந்திருந்தால் அரிசி, மீன் வேண்டிச் சமைச்சிருக்கலாம்." புகையிலைக் கண்டுகளுக்குத் தம்பல் கொத்திய மூவருமே, 'நான் கூடக் கொத்தினேன்; நீ கூடக் கொத்தவில்லை, என்று விவாதித்துக் கொள்கிறார்கள். கூடவே, ஜெயா தான் கொண்ட பால்காச்சிய சட்டியை பங்குக்கு விடமாட்டேன் என்கிறான்.

பால் காச்சிய சட்டி!

ஏன் விடுகிறான் இல்லை?

அடியில் ஒட்டிய ஆடைகளில் ஒரு சுவை இருக்கிறது!

சுண்டுச்சட்டியின் சுவை அமிழ்தத்திற்கு இணையாகச் சுவைக்கும். இது கனகத்தின் பிள்ளைகளுக்கு நன்றாகத் தெரிந்த - அனுபவித்த விடையம்.

பெடியளின் வயிறை பசுப்பால் நிரப்பிக்கொள்ள, கனகம் தன் குருதியை கடைக்குட்டிப்பெட்டையின் வாய்க்கூடாக அதன் வயிற்றுக்குள் செலுத்தினாள். மடிக்குள் முடங்கிய நாளைய தாய் கனகத்தின் முலையை ஒய்யாரமாய் நன்னிக் கொண்டாள்! காவலர், கவனமாக இவர்களெல்லோரையும் பார்த்துச் சபித்துக் கொண்டார்." நல்லகாலம் இவர்களை நம்பியிருந்தால் நம்மபாடு அவ்வளவு தாம்" என்றும் கூடவே எண்ணிக்கொண்டார்.

உலாத்துக்குப் போனவேளை பக்கத்து ஒழுங்கை தபால்காரர் விஸ்வலிங்கத்தார் வீட்டினது கோழியை மெல்லப்பதுக்கி ஏப்பம் விட்டிருந்தார், கனகத்தின் காவலர். அதில் அவருக்கு முழுத்திருப்தி! இதனால், வீட்டுக்காரரை சபிப்பதோடு நிறுத்திவிட்டு கனகத்தின் கால்மாட்டில் நீட்டி நிமிர்ந்தார். வானம் இடைவிடாது அழத்தொடங்கியது. சதா சிணுங்குவது தன் நடவடிக்கையால் காட்டியது. கருமுகில்கள் வானத்து நிலவை விழுங்குவதும், கக்குவதுமாக விளையாடிக் கொண்டிருக்க மின்னல் ஒளியைப் பாய்ச்சி இருளைக் கிழித்து இடித்துச் சுருங்கியது.

***

"கவிதா, அம்மா கவிதாஞ்சலி; நீ என்ன பிள்ளை செய்யிறாய்? வா பிள்ளை, வந்து சாப்பிட்டு போய் தூங்குபிள்ள." அடுப்புக்கட்டில் வெந்துலர்ந்த பார்வதி மகளைக் கூப்பிட்டு கட்டளை போட்டாள்.

கவிதாஞ்சலி படிப்பறையில் மிக,மிக ஆவலாக வேதகால ரிஷிகளின் தத்துவங்களில் மூழ்கியிருந்தாள்.

நசிகேதனுக்கும் காக்கிக்கும் இடையில் ஏற்பட்ட விவாதிப்புகளில் அவள் லயித்துப்போய் வெகு நேரமாச்சு. "பிரம்ம இரகசியம்" அவள் சிந்தையில் பல கேள்விகளைக் கேட்டது.

உபநிஷதம் கார்கியின் விளக்கத்தோடு அவள் மற்றைய அத்வைதம்; மீமாம்சம்; சமணம்; பௌத்தம்; சாங்கியம்; யோகம்; நியாயம்; வைசேஷிகம்; உலகாயதம் என்று பல விளக்கங்களுக்கூடாக சுற்றி வந்தாள். படைப்பின் விளக்கங்கள் அவளைப் பிரமிக்க வைத்தது. சார்வாகரிடம் அவளுக்கு மரியாதை ஏற்பட்டுவிட்டது. ஆரிய சங்கரிடம் விஞ்ஞானம் பார்த்தாள்.

மாறும் பொருளின்றி மாற்றமே நிரந்தரம்!

பௌத்தம் அவள் இருப்புக்குச் சவாலிட்டது.

கவிதா யோசித்து கொள்ள முயலுகையில் அவள் அம்மா "அடியேய் கவிதா உன்னை எவ்வளவு தரம்தாண்டி கூப்பிடுகிறது?" என்று கூவியபடி அடுப்படியை விட்டெழுந்து கவிதாவின் படிப்பறைக்குள் நுழைந்தாள். அங்கு கவிதாவின் கையிலிருந்த புத்தகத்தை பறித்து மேசையில் வீசியெறிந்தாள். கூடவே அடுப்படிக்குள் கவிதாவை இழுத்துச் சென்றாள்.

"பாவி மனுஷி!; இந்த மனுஷியோடு பெரும்பாடாய்ப் போச்சு. படிக்க விடாத பட்டிக்காட்டு மனுஷி; பெரிய சாப்பாடு. படிப்பைவிட என்ன சாப்பாடு? அலுத்துக் கொண்டாள். அவளுக்கு, தத்துவத்தில் ஆராய்ச்சிப்பட்டம் பெறுவதில் தந்தையார் பொன்னம்பலம் மாஸ்டர் உதவிகளை வழங்கியபடியே.. தாய் தொடர்ந்து குறுக்க நின்றபடி.. இடையில் ஒரே செல்வமகள் கவிதாஞ்சலி மிரண்டு பிடிக்க கங்கணம் கட்டியபடி.

சமையல் அறையின் ஜன்னலைத் திறந்துவிட்டு சோம்பல் முறித்து வெளியில் பார்வையைச் செலுத்தினாள் கவிதா.

கும்மிருட்டு.

வேம்பு மரத்திலிருந்து மழைநீர் 'காற்றுக்குச், சிந்திக் கொண்டிருந்தது. வேம்பில் குடியிருக்கும் பட்ஷிகளும் தங்கள் இருப்பை உறுதி செய்வதுபோல் முனகலிட்டன. கவிதா, பார்வையைக் குவித்து வேம்பை நோட்டமிட்டாள். ஆந்தையொன்று அவளைப் பார்த்து முழிந்தது. மெல்ல ஜன்னலைச் சாத்திவிட்டு தாய் போட்டுவைத்த உணவை அருந்தினாள். அவளுக்கு உணவு ருசிக்கவில்லை. ஏனோதானோவென உண்ட கவிதா விறாந்தையை நோக்கி நடந்தாள். தாய் பார்வதி விறாந்தையில் கிடந்த மரவாங்கிலில் ஒருகளித்துத் தூங்கிக்கொண்டிருந்தாள்.

*"ஆவியொடு காயம் அழிந்தாலும் மேதினியில்*
*பாவி என்று நாமம், படையாதே!*
*-மேவி யசீர்*
*வித்தாரமும் கடம்பும் வேண்டா மட நெஞ்சே!*
*செத்தாரைப் போலத் திரி!"*

பாட்டோடு பட்டணத்து அடிகளாக கேற்றுத்திறந்து உள்ளே சென்றார், பொன்னம்பலம் மாஸ்டர்.

கவிதாவுக்கு புரிந்துவிட்டது!

தந்தையின் வயிற்றுக்குள் தேசிய பானம் நிறைந்துவிட்ட தென்பதை பட்டணத்தாரின் பாடலில் கண்டுகொண்டாள்.

போதையானால் பட்டணத்தார்; போதைபோனபின் திருஞானசம்பந்த மூர்த்தியாகும் தகப்பனை கவிதா சிறுபிராயத்திலிருந்தே பார்த்து வருகிறாள்.

தகப்பனின் வருகையைக் கண்ட கவிதா, தாயைத் தட்டியொழுப்பினாள்.

"பார்வதி.. பார்வதி.. என்னடி யாத்தை செய்யிறாய்?; சரியான மழையாகக் கிடக்கு"

"என்னங்க இவ்வளவு நேரமாய்.. எங்க உலாத்துக்குப் போயிட்டுவா

15.ஆம் பக்கம் பார்க்க

www.padippakam.com



# ❑ தேவதை ❑ ராமன் அப்துல்லா


ராமன் அப்துல்லா


பாலு மகேந்திரா

## இரண்டு படங்கள்! இரண்டு கலைஞர்கள்!

இந்தியா சுதந்திரமடைந்து பொன்விழா கண்டுவிட்டது. இந்த காலகட்டத்தில் இந்தியா பல்வேறு துறைகளிலும் அடைந்துள்ள அபிவிருத்தி குறித்தெல்லாம் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. அதில் இந்திய சினிமாவும் கூட அடக்கம். சர்வதேச ரீதியில் பல நல்ல கலைஞர்களையும், படைப்புகளையும் இந்தியா உலகுக்கு வழங்கியிருக்கிறது. வழங்கி வருகிறது. இப்படி பொதுவாக கூறினாலும் இந்த பங்களிப்பில் முக்கிய பாத்திரத்தை ஆற்றி வருவது மேற்கு வங்கம், கேரளா போன்ற மாநிலங்களே. மேற்குவங்கம்; சத்யஜித்ரே, ரித்விக் கட்டக், மிருனாள் சென் போன்ற தலை சிறந்த இயக்குனர்களையும், கேரளம்; அரவிந்தன், அடூர் கோபாலகிருஷ்ணன், ஜான் ஆப்பிரகாம் போன்ற இயக்குனர்களையும், நல்ல பல கலைஞர்களையும் உலகிற்கு வழங்கியுள்ளன.

இந்தச் சூழலின் பின்னணியில் தமிழ்சினிமாவின் பங்களிப்பு எப்படியிருக்கிறது என்பதற்கு அண்மையில் எதிர்பார்க்கப்பட்ட இரண்டு படங்களை எடுத்து நோக்குவோம். ஒரு பானை சோற்றுக்கு இரண்டு சோறு பதம்.


சத்தியஜித்ரேயின் 'சாருலதா'

பூனா, அடையாறு திரைப்படப் பள்ளிகளில் படித்து புதிய பார்வையுடனும் லட்சிய நோக்குடனும் இருந்த ஒருவரை மலையாள, கன்னட திரைப்பட உலகம் பயன்படுத்த தொடங்கியது. 'கோகிலா' கன்னடப்படத்தின் மூலம் அறிமுகமானாலும், தமிழில் 'முள்ளும் மலரும்' ஒளிப்பதிவு மூலம் பளிச்சென்று பிரபலமானார். அதன் பின்பு தமிழ் திரையுலக இரசிகர்கள் ஒளிப்பதிவு குறித்தெல்லாம் விமர்சிக்க தொடங்கினார்கள். தனது தாகத்தை தணிக்க ஒளிப்பதிவுடன் நின்றுவிடாது தானே திரைக்கதை வசனம் எழுதி "அழியாத கோலங்களாக தமிழ் இரசிகர்களின் மனங்களில் படிந்துவிட்டவர் பாலு மகேந்திரா. தமிழ் சினிமா கையாண்டு வந்த கதை சொல்லல் பாணியில் முற்றிலும் மாறுபட்டு கதை சொன்னவர். அழியாத கோலங்கள் வியாபார ரீதியாகவும் வெற்றி பெற்றமை பலரை ஆச்சரியப்பட வைத்தது.

இளமைப் பருவத்தில் ஏற்படும் பாலியல் உணர்வுகளையும், உந்துதல்களையும், அதனால் ஏற்படும் நெருக்கமான நட்புறவையும் அழகான கவிதையாக வடித்து தந்தவர் பாலு. இதற்காக சிலவிமர்சகர்களின் பாராட்டையும், பல விமர்சனங்களின் சாபத்துக்கும் ஆளானவர். "சின்னப் பையன்களை வைத்து சீரழிவுக் கதை சொல்லியிருக்கத் தேவை இல்லை. பின்னாளில் பலபேர் இந்த சமூக விரோத காரியத்தில் ஈடுபட பாலு மகேந்திரா வழிகாட்டினார்" என பழைய இடதுசாரி விமர்சகரான அறந்தை நாராயணன் இந்தப் படத்தைப் பற்றி மிகவும் காரசாரமாக விமர்சித்திருந்தார்.

அழியாத கோலங்களில் இருந்து ராமன் அப்துல்லா வரை பல மசாலாப் படங்களையும், சில கலைத்துவமான படைப்புக்களையும் (சீரியஸான) வியாபார ரீதியில் வெற்றி தோல்வி படங்களையும் பாலு நமக்கு அளித்திருக்கிறார். மாசாலா சினிமாவை பாலுவிடம் இருந்து எதிர்பார்க்க விரும்பாத இரசிகர்களும் விமர்சகர்களும் அவரை கேள்விக் கணையால் துளைத்த போது; அதற்காக அவர் கூறிய காரணங்கள் வர்த்தக சினிமா உலகில் இயங்கும் பல இயக்குநர்களும் ஒப்புவித்த அதே பல்லவி தான் என்ற போதிலும் அதற்காக உண்மையில் மனம் வருந்தியவர். வர்த்தக ரீதியில் பெரு வெற்றி பெறவில்லை.

இடையில் சிலகாலம் வர்த்தக சினிமாவை விட்டு சற்று விலகி இருந்தார். இந்தக் காலத்தில் தான் தமிழ் சினிமாவில் இருந்து பல அம்சங்களில் முறித்துக் கொண்ட 'வீடு' என்று அற்புதமான படைப்பை தந்தார். இதுவே தமிழ் சினிமாவில் வந்த முழு அளவில் ஒரு தரமான படம் என்று விமர்சகர்கள் பாராட்டுகின்றனர். பின்னால் நான் கூறப்போகும் விடயங்களுக்கு இந்த அம்சங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவரது 'சந்தியா ராகம்' படமும் திரைகளில் வரவில்லை என்ற போதும் திரைப்படவிழாவில் இடம் பெற்று பலரது பாராட்டையும் பெற்றிருந்தது. பெரும்பாலும் வேற்று மொழிப் படங்களின் நேரடிப் பாதிப்பினால் உந்தப் பெற்றே இவரது படங்கள் உருவானாலும் அவற்றை தமிழ் சூழலுக்கு ஏற்ப பாலு மகேந்திரா என்ற கலைஞருக்கூடாக வழங்குவதில் இவர் பெரும்பாலும் வெற்றி பெற்றுவிடுகிறார். அர்த் என்ற இந்தி சினிமாவை 'மறுபடியும்' அர்த்தமுள்ள படமாக தந்தார்.

இவரது படங்களில் கதை தெளிவாக இருக்கும். திரைக்கதை நேர்த்தியாக இருக்கும். ஒரு திரைப்படத்துக்கு திரைக்கதை நேர்த்தியாக இருப்பது பிரதானம். சத்தியஜித்ரே, ரித்விக் கட்டக், மிருனாள் சென் போன்ற அற்புதமான கலைஞர்களின் படங்களில் நடித்த மாதவி சக்கரவர்த்தி ஒரு முறை கூறினார். "கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் மற்றொன்றில் இருந்து முழுவதுமே வேறுபட்டவை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு பிடித்த திரைக்கதையைப் பற்றி நீங்கள் அதிகம் யோசிக்கத் தேவையில்லை. அது தன்னிச்சையாகவே வெளிப்படும் (பாத்திரங்களின் உணர்ச்சி வெளிப்பாடு) ஆனால் திரைக்கதை அவ்வளவு எளிதாக அமையாவிடில் நீங்கள் மண்டையை உடைத்துக் கொண்டாலும் திருப்தியான விளைவைக் கொடுக்காது. நீங்கள் விரும்பினாலும், விரும்பா விடினும் ஒவ்வொன்றும் திரைக் கதையைப் பொறுத்தே இருக்கிறது." இங்கு வாசகர்கள் கதை என்பதும் திரைக் கதை என்பதும் முற்றிலும் வேறு பட்ட அம்சங்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதே மாதவி சக்கரவர்த்தி சத்யஜித்ரேயின் திரைக்கதையைப் பற்றி கூறும்பொழுது "(கதாபாத்திரங்கள் பற்றி) எந்த விரிவான விளக்கமும் இல்லை. முன்பே திரைக்கதைப் பிரதியை கொடுத்து விடுவார். கதாபாத்திரம் பற்றி சுருக்கமாக விளக்கிவிடுவார். ஒவ்வொரு நாளும் படப்பிடிப்புக்கு நாங்கள் என்ன செய்யப்போகிறோம் என்பது பற்றி ஒரு சில வார்த்தையே கூறுவார். 'சத்தியஜித்ரே பிரதி' என்பது தெளிவாகவும், இயல்பாகவும் இருக்கும் அதற்கு எந்தவித விளக்கமும் அவசியமும் இல்லை." சத்யஜித்ரேயுடன் பாலு மகேந்திராவை ஒப்பீடு செய்ய முடியாவிட்டாலும், திரைக்கதை தெளிவைப் பொறுத்தமட்டில் நிச்சயம் ஒப்பிடலாம். 'அழியாத கோலங்கள்', 'வீடு', 'மறுபடியும்' போன்ற படங்கள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

சினிமா பற்றிய பிரக்ஞை உள்ள பல கலைஞர்களும், இயக்குனர்களும் தாம் வர்த்தக சினிமாவுடன் சமரசம் செய்து கொண்டிருப்பதே நல்லதொரு படைப்பைத் தந்து "தமிழ் சினிமாவின் தரத்தை உயர்த்துவதற்கே" என்று கூறிக்கொண்டாலும் இறுதியில் அந்த சக்தியால் அவர்களும் அமுங்கிப் போனதே வரலாறாகிவிட்டது. இதனால் வர்த்தக சினிமாவில் அவர்கள் தமது கலை ஆற்றலை பரீட்சித்து பார்க்கவில்லை என்றும் அர்த்தமில்லை.

> சத்யஜித்ரேயுடன் பாலு மகேந்திராவை ஒப்பீடு செய்ய முடியாவிட்டாலும், திரைக்கதை தெளிவைப் பொறுத்தமட்டில் நிச்சயம் ஒப்பிடலாம். 'அழியாத கோலங்கள்', 'வீடு', 'மறுபடியும்' போன்ற படங்கள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

இதை நிருபிப்பதுபோல் அமைந்துள்ளது பாலுமகேந்திராவின் அண்மைய வெளியீடான 'ராமன் அப்துல்லா' மசாலாப் படங்கள் என்றாலும் அதில் தனக்கென தனிமுத்திரை பதித்து தனியாகத் தெரியும் பாலு என்ற கலைஞன் காணாமல் போய்விட்டான் ராமன் அப்துல்லாவில்.

மதவெறி அரசியல் தாண்டவமாடும் இந்தியச் சூழலில் பல சினிமாக்கள் அதை படம் பிடித்திருக்கின்றன. இது குறித்து பல்வேறு கலைஞர்களும் தமது பல்வேறு பார்வைகளை சொல்லியிருக்கிறார்கள். 'பம்பாயில்' மணிரத்தினமும் தெரிந்தார். 'குருதிப் புனலில்' இந்து - முஸ்லிம் என இரண்டு கதாநாயகர்களைப் படைத்து இந்துவைவிட முஸ்லிம் தேசப்பற்றுள்ளவன் என காட்ட முனைந்தார் கமல்ஹாசன். பம்பாய் திரைப்படம் பற்றி தன் காரசாரமான விமர்சனங்களை சுபமங்களா ஆசிரியர் கோமலிடம் தெரிவித்தவர் பாலுமகேந்திரா. இந்தப் பின்னணியில் ராமன் அப்துல்லா நிறைய எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தது. ஆனால் எதிர்பார்ப்புகள் எல்லாம் புஸ்வாணமாகிவிட்டன. மணிரத்தினம், கமல் போன்றவர்கள் இது குறித்து தங்கள் எண்ணங்களை சீரியஸ் தன்மையுடன் வெளிப்படுத்தினார்கள். பாலு மகேந்திரா பகிடியுடன் சொல்ல வந்த விடயத்தையே பகிடியாக்கிவிட்டார்.

"உன்மதமா? என்மதமா, ஆண்டவன் எந்தமதம்? என்று சீரியஸாக தொடங்கும் பாடல் வேறு, படத்துடன் ஒட்டாமல் கேலிக்குரியதாகிறது. தமிழகத்தைச் சேர்ந்த சராசரி சினிமா ரசிகரான ராமன் என்பவரே "நாடக சபாவுல நடக்கிற நாடகம் மாதிரி அங்கங்க நகைச்சுவையை சேர்திருக்காரு. இந்தமாதிரி படமெடுக்க பாலு மகேந்திரா எதுக்கு?" என்ற கேள்வி ரசிகர்களின் ரசனையில் பழிபோடும் இயக்குனர்களுக்கு நல்ல பதில். "இப்போது படவுலகம் இருக்கும் சூழ்நிலையில் ஒரு சீரியஸ் படம் எடுக்கும் சூழ்நிலையில் நான் இல்லை. எனவேதான் மீண்டும் ஒரு மெலிதான நகைச்சுவை இழையோடும் பொழுது போக்கு படம் ஒன்றை தந்திருக்கிறேன். ஒரு வகையில் பொழுது போக்கு படம் தருவதும் சீரியஸ் பிஸினெஸ் தான்." என பாலு மகேந்திரா கூறுவது ஒருவகையில் சரிதான் என்ற போதும்; படவுலகம் இருக்கும் சூழ்நிலையில் பாலு என்ற கலைஞனால் எப்படி நகைச்சுவை 'மெலிதாக இழையோட' படம் தரமுடிகிறது, என்பது ஒரு படைப்பாளியின் நேர்மை குறித்த சந்தேகங்களை எழுப்பக்கூடியது.

"படத்தில் பாலுமகேந்திரா காமெராவில் மட்டுமே தெரிகிறார் எங்கே இயக்குனர் பாலு மகேந்திரா? என்ற கேள்விக்கு" சீரியஸாக ஒன்றுமே சொல்ல வரவில்லை என்ற பாலு மகேந்திரா "புறக்கண்ண திறந்து பாக்கணும் சார்" என்று சப்பைக்கட்டு கட்டுகிறார். இது படைப்பாளி குறித்த சந்தேகத்தை கொடுப்பதோடு, அவரின் இயலாமையின் வெளிப்பாடா என்ற கேள்வியையும் எழுப்புகிறது. பாலு மகேந்திரா அகக்கண்ணைத் திறந்து பார்க்கச் சொல்லும் விசயம் அவர் முஸ்லீம்களையும் நல்லவர்கள், நேர்மையானவர்கள் என்று சொல்வதே. இதற்கு அகக்கண்ணும் புறக்கண்ணும் தேவையில்லை. இருட்டுக் கண்ணே போதும்.

பாலு மகேந்திரா என்ற மனிதனின் நல்லெண்ணம் மதிக்கப்பட வேண்டியது. நல்லெண்ணம் மட்டுமே நல்ல படைப்பை தந்துவிடாது. நாம் எதிர்பார்ப்பது பாலு என்ற கலைஞனை.

அரிகரபுத்திரன்

மிகுதி அடுத்த இதழில்...

படிப்பகம்

www.padippakam.com



# பெண் அரசும் பெண்கள் நிலையும்

றஞ்சி (சுவிஸ்)

மனித சமூகங்களை அடக்கி ஆள, அவர்களது உழைப்பை அபகரிக்க, ஆளும் வர்க்கம் பல ஆயுதங்களைப் பயன்படுத்துகிறது. அரசியல் சட்டம், வன்முறை, இராணுவம், பொலிஸ் நீதிமன்றம், சிறைச்சாலை, இனவேறுபாடு, மதம், குடும்பம் போன்ற இன்னும் பல. மக்கள் தங்கள் பிரச்சினைகளை அரசு மூலமே தீர்க்க முடியும் என நம்பிக்கை வைக்கின்றார்கள். அதற்கு ஏற்றதாற்போல் இன்றைய தொடர்பு சாதனங்களும் அரசின் அதிகாரத்திற்கு ஏற்ப ஊதுகுழலாக விளங்குகின்றன. அரசு தனக்கு எதிர்ப்பான செய்திகளை தணிக்கை செய்வதுடன் பல பொய்ப் பிரச்சாரத்தையும் இந்த தொடர்புசாதனங்கள் மூலம் மக்களுக்கு வழங்குகிறது. இன்று உலகெங்கும் ஆண் தலைமை ஆட்சி சமுதாய அமைப்பு முறையே காணப்படுகின்றன.

> சந்திரிகாவின் அரசு ஆண் நிலைக் கருத்துக்களை கேள்விக்குள்ளாக்கும் என்று யாருமே எதிர்பார்க்க முடியாதுதான். என்றாலும் குறைந்தபட்சம் பெண்கள் மீதான வன்முறைகள் நடைபெறாமல் இயன்றளவு கட்டுப்படுத்துவதில் தனது அதிகாரத்தை பயன்படுத்த ஏன் முயற்சிக்கக்கூடாது என்ற கேள்வி எழுவது நியாய மானதே

அதில் ஓரிரு பெண்கள் இந்த ஆண் சமுதாய ஆட்சிமுறையினுடே அரசியலுக்கு வந்துள்ளார்கள். இந்த ஆண் சமுதாய ஆட்சி அமைப்புக்கும் முதலாளித்துவ அமைப்பு முறைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதினால் தான் குறிப்பாக பெண்கள் வன்செயலுக்குள்ளாகின்றனர். பெண்கள் பொருளாதார ரீதியாகவும், சமூகம், மதம், குடும்பம், அரசு ரீதியாகவும் சுரண்டி அடக்கப்படுவதையும் பல அரசுகள் வன்முறைகளை மக்கள் மீது கட்டவிழ்த்து விடுவதையும் இவ்வமைப்பு முறைகளில் காண்கின்றோம். இப்படியான நிலையில் ஓரிரு பெண்கள் அரசியலுக்கு வந்துள்ளனர். இந்த அரசியலுக்கு வந்த பெண்களைப் பார்க்கும் போது (இவர்கள் தந்தைவழிச் சமூக அமைப்பினுடாக அரசியல் தளத்திற்கு வந்தவர்களாதலால்) அவர்களும் பல கருத்துக்களை ஆண் நோக்கிலேயே கடைப்பிடிக்கின்றனர்.

இப் பெண் அரசியல்வாதிகளைப் பார்க்கும் போது ஏதோ ஒருவிதத்தில் ஆண்களைச் சார்ந்தவர்களாகவே உள்ளனர். அரசியல் கட்டுமானங்கள், சட்டதிட்டங்கள, அரசியல் நடைமுறைகள் அனைத்துமே ஆண் அரசியல்வாதிகளினால் வகுப்பட்டவையே. அதையே இந்த பெண் அரசியல்வாதிகளும் எந்தவித கேள்வி மாற்றமும் இன்றி நடைமுறைப்படுத்துகின்றனர்.

இன்று நமது நாட்டுத் தலைவரும் ஒரு பெண்மணியாவார். ஆனால் நமது நாட்டில் நடக்கும் போரினால் பல பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாகின்றார்கள். இவர்களுக்காகவோ அல்லது மற்றைய பெண்களின் பாதுகாப்புக்காவோ பெண் தலைவர் என்ன செய்தார். இதுவே கடந்த காலங்களில் இருந்த ஆண் ஆட்சியாளர்களினாலும் கடைப்பிடிக்கப்பட்டது.

இன்று பெண் விடுதலை பேசும் பத்திரிகைகள் கூட (சரிநிகர், உயிர்ப்பு) சந்திரிகாவின் அரசியலை விதவை அரசியல், சமயலறை அமைச்சரவை என்றெல்லாம் எழுதுவதை நாம் பார்க்கிறோம். இந்த வார்த்தைப் பிரயோகங்கள் கூட இவர்களிடம் எஞ்சியுள்ள ஆண் நோக்கினையே வெளிப்படுத்துகின்றன. இப்படியிருக்க, பெண் விடுதலை பற்றிய எந்தவித அக்கறையுமற்ற சந்திரிகாவின் அரசு ஆண் நிலைக்கருத்துக்களை கேள்விக்குள்ளாக்கும் என்று யாருமே எதிர்பார்க்க முடியாதுதான். என்றாலும் குறைந்தபட்சம் பெண்கள் மீதான வன்முறைகள் நடைபெறாமல் இயன்றளவு கட்டுப்படுத்துவதில் தனது அதிகாரத்தை பயன்படுத்த ஏன் முயற்சிக்கக் கூடாது என்ற கேள்வி எழுவது நியாயமானதே.!

# எனது மலையுச்சி மனிதன்

ஓர் அழகிய வண்ணத்துப் பூச்சியை
நான் வரைகிறேன்-
தாளிலிருந்து அது பறந்துபோகும்வரை.
அதுவரை என்னை நான்
ஓர் ஓவியனாக பிரகடனப்படுத்துவதாயில்லை.

முகம்தொலைந்து
சதையிறுகிப்போய்விட்ட
மனிதக்கூடொன்றின் கையில்
துப்பாக்கி மட்டும்
பளபளக்கிறது.
எனது தேசத்து மலையுச்சியில்
தேங்கிப்போனதெல்லாம் இந்த மனிதனும்
எரிந்துபோன முகில்களும் மட்டுமே.

வெடிகுண்டில் பூவிரித்து
சமாதானச் சிரிப்பொழுக
முகத்தை சிரமப்படுத்தும்
மனிதர்களே!
வரையுங்கள் உங்கள் சமாதானத்தை,
இந்த மனிதன் எழுந்து நடக்கட்டும்-
விரல்நழுவி விழும் துப்பாக்கியுடன்.
குழந்தை தன் முகத்தில் நிலாவை வரையட்டும்.
நாயொன்று தன் வித்தியாசமான குரைப்பை நிறுத்தட்டும்.

எமது வீதிகளைவிட்டு அகன்றுகொள்ள வேண்டியது
அந்நியர்கள் மட்டுமல்ல,
எனது இனத்து
சமாதானப் பொதியின் பூச்சாண்டிக்காரர்களும்தான்.

ஓர் அழகிய காலை
எனது விழிவழியே துள்ளியோட
முகம்கொள்ளா மகிழ்வுடன்
எனது பொழுதை நான் தொடங்க வேண்டும்.
பாடசாலைகள்
வேலைவெட்டிகள்
சனசந்தடிகள்
தாங்கியபடி...
மெல்லியதாய் மௌனப்பட்டும் எம் மாலைப்பொழுது.
என் உடலின் பிடிநழுவி
இருளில் மிதந்துசென்று,
சேதிகண்டு ஓடிவந்து
மீண்டும் வந்தமரும் விழிகளோடு
எப்போ நான் நடப்பேன்?
பொதிசொல்லும் குடுகுடுப்பைக்காரர்களே
போய்வாருங்கள்!

எனது மலையுச்சி மனிதன்
தன் உயிர்ப்புக்காய்க் காத்திருக்கிறான்.

ரவி
நவம்பர் 97



# புனர்ஜென்மம்

மனிதர்கள் இறந்ததாய்
வரலாறில்லை
பொலிவியக் காட்டினில்
புத்தொளி அறுத்துப்
புதைத்தவன் எவன்
மூன்றாம் நாளில்
மரித்தோன் மீண்டதாய்
மானுடம் சொல்லும்
முதிர்ந்து முறிந்த
முப்பது ஆண்டிலும்
உதிர்ந்த தோலுடன்
உயிர்த்தே எழுந்தாய்
மக்களின் மைந்தனாய்

கவிதைகள் போன்று
துளிர்த்திட வேண்டும்
விடயங்களிலே
வாழ்ந்திட வேண்டும்
விளம்பரத்திற்கல்ல
வீரம் செறிந்த
விடுதலைக் குரவர்க்கு

சேகுவேரா
ஆர்ஜன்டீனியக்
கொழுந்தொன்றெழுந்து
கொடுமைகட்கெதிராய்
கொலை வாளெடுத்து
கொள்கையென்று
செங்கொடி ஏந்தி
கியூபத் தீவினில்
கிளைகள் பரப்பி
நிழலைக் கொடுத்தும்...
உலகின் விழுதினை
ஊன்ற முயல்கையில்
உதிரம் மட்டும்
உறைந்ததேன் தோழா

வார்த்தையும் நேயமும்
கொண்டோர்க்கெல்லாம்
வன்முறைப்பரிசு
வதையென்றறிவோம்
வரலாறென்ன
தடத்தையும் கூட
இணைத்ததால் தானோ
வையத்துள்ளே
மறைத்தனர் உன்னை
இத்தனை காலமும்

உழைக்கும் மாந்தர்
கரத்தின் வலுவாய்
ஒடுங்கி வாழும்
மனத்தில் புயலாய்
உதயம் தேடும்
கண்களின் கனலாய்
மீண்டும் மீண்டும்
நீயே பிறப்பாய்

சங்கர்

13ஆம் பக்கத் தொடர்ச்சி

றிங்க?; கலகத்தின்ரை பொடியள் இரவு, எட்டு மணிவரையும் காவலிருந்தாங்கள்; பாவங்கள், தோட்டத்தில் முறிஞ்சுபோட்டு பசியோட காவலிருந்ததுகள்! இரவைக்கு என்ன சாப்பிட்டுதுகளோ?.."

பார்வதி, கணவனின் தாமதிற்கு காரணமறிய- கனகத்தின் குஞ்சுகளைத் துணைக்கழைத்தாள்.

பொன்னம்பலத்தாரின் பாட்டுக்தம் - கேள்விக்கும், பார்வதியின் கணீரென்ற குரலுக்கும் திடுக்கிட்டெழுந்தன பூனையும், நாயும். பூனையின் கண்கள் மின்விளக்கின் வெளிசத்திற்கு கண்ணாடி போளைகள் பால் மின்னிக்கொண்டன. அதுபாலவே பொன்னம்பலத்தாரின் கண்கள் கொவ்வம் பழம் போன்றிருப்பது பார்வதியின் விழிகளுக்கு தெரிந்துகொள்ள அவள் அதற்கு மேல் கேள்விகள் கேட்க துணியவில்லை.

"அடியேய்பிள்ள. வழியில இவன் துரைராஜனைக் கண்டனான். அவனோடு கதைச்சுக்கொண்டு நிண்டதில நேரம் போயிட்டுது."

"இப்பமணியென்னப்பா?; இரவு பத்துமணி! துரைராஜனை வழியில கண்டனீங்களா இல்லை, கொட்டிலில கண்டனீங்களா?" கவிதா, தன் பங்குக்கு தகப்பனை கழுமரத்தில் ஏற்றினாள்.

கவிதாஞ்சலியின் சூடான கேள்விகள் பொன்னம்பலம் மாஸ்டருக்கு தர்ம சங்கடமாக இருக்க, அவர் மகளைச் சமாதானப்படுத்த வேண்டிய நிலைக்கு தன்னைத்தயார்படுத்தினார். "என்ர குஞ்சு. பிள்ள கவிதை; செல்லம்! நீ படிச்சிட்டியோ குஞ்சு? இண்டைக்கு என்ன படிச்சாய்? நான் மேசையில எடுத்து வைச்ச சோக்ரதரைப்பற்றி படிச்சியோ பிள்ள?; கிரேக்க நாட்டு தத்துவமேதை அவர். அவரைப் பற்றி நம்ம தமிழ்நாட்டு ராஜாஜி எழுதிய புத்தகம் பிள்ளை.."

கவிதா எதுவுமே பேசவில்லை.

மாஸ்டரின் தந்திரம் பலிக்கவில்லை. அவர் வேறு கதைக்குத் தாவினார்.

"பிள்ளை கவிதா! அப்பாவுக்கு சாப்பாடு போடடி பிள்ள. கொம்மா சாப்பிட்டுட்டாளோ? அதோட என்ர படுக்கையில பட்டணத்தாற்ற பாடல் புத்தகத்தை எடுத்து வைச்சுவிடடி குஞ்சு; இரவைக்கு அவரை திரும்பப் படிக்க வேணும் போலகிடக்கு"

பொன்னம்பலத்தார் மகளுக்கு கட்டளையிட்ட வண்ணம் கிணற்றடியை நோக்கி நடந்தார்.

நாய் சகலவற்றையும் கேட்டுவிட்டு தலையைக் குப்புறப்போட்டு விழிகளை மூடியது.

கவிதாஞ்சலி அடுப்படிக்குள் போவதற்குமுன் பார்வதி அடுப்புக்குள் நுழைந்து ஏதோதோ செய்தாள். கவிதா போர்வைக்குள் முடங்க, பூனை அவள் கால்மாட்டில் உரசிக்கொண்டு நின்றது.

(தொடரும்)

www.padippakam.com



வெளி

# இதுவரை யாழில் 8000 பேர் வரை பலி

யாழ்ப்பாணத்தில் 1990இலிருந்து 1997வரையிலான யுத்தத்தினால் 8554 பேர் உயிரிழந்துள்ளதாக யாழ் கச்சேரியில் பதிவாகியுள்ளது.

புனரமைப்பு புனர்வாழ்வு அமைச்சு வடக்கு (RRAN)இன் பொறுப்பாளர் சோமபால குணதீர என்பவரே மேற்படி செய்தியை வெளியிட்டுள்ளார். இவ்வாறு இறந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் திட்டமும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. RRAN சந்திரிகாவின் நேரடிக் கண்காணிப்பில் உள்ளது.

# இரண்டு நூல்கள்: வெளியீட்டு விழா

"விடியாத இரவுகள்",
"நந்தி உடையார்"
ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா 1998 ஜனவரியில் "வெளி" பத்திரிகையின் ஆதரவில் லண்டனில் நடைபெறவுள்ளது.

கோவிலூர் செல்வராஜன் எழுதிய "விடியாத இரவுகள்" நோர்வேயில் வாழும் புகலிட எழுத்தாளரின் சிறுகதைத் தொகுப்பாகும். மட்டக்களப்பு திருக்கோயிலைச் சேர்ந்த செல்வராஜனின் இச்சிறுகதைத் தொகுப்பிற்கு இந்திரா பார்த்தசாரதி முன்னுரை எழுதியிருக்கிறார்.

அருணா செல்லத்துரை எழுதியுள்ள "நந்தி உடையார்" வன்னிப் பாரம்பரிய வரலாற்று நாடகமாகும். முள்ளியவளையைச் சேர்ந்த அருணா செல்லத்துரை சிறந்த மெல்லிசைப் பாடகருமாவார்.

"அஞ்சல்", "நாழிகை" வெளியீடுகளின் ஆசிரியர் திரு. மகாலிங்கசிவம் (மாலி) இந் நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை வகிக்கிறார்.

கோவிலூர் செல்வராஜனும் எம். சத்தியமூர்த்தியும் இணைந்து வழங்கும் மெல்லிசை நிகழ்ச்சியும் இவ் வெளியீட்டு விழாவில் இடம்பெறும்.●

When she deserves
only the best......

Mulji's

SPECIALISTS
IN 22CT GOLD HALLMARKED JEWELLERY
AND EXCLUSIVE DIAMOND JEWELLERY

உங்கள் விருப்பத்திற்கேற்ப தாலிக் கொடி, வைரக் கல் தோடு,
அட்டியல், பதக்கம் சங்கிலி, மெட்டி, மோதிரம்
Thali & Kodi made to order
Naclune cut bangles, Stone Earrings, Padakkam, Atyal, Baby bangles, Sovereigns
........Visit us for a variety of special offers

*Fascinating beauty*
*Plus real value*
*Gift some golden memories*
*this festive season*

216-219 UPPER TOOTING ROAD, LONDON SW17 7EW
TEL: 0181- 767 8818

# கொழும்பில் கண்டன ஊர்வலம்



தொடரும் கெடுபிடிகள்

கொழும்பில் இலங்கையரசின் மனிதஉரிமை மீறல்களுக்கெதிராக கண்டன ஊர்வலமொன்று நடாத்தப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியில் தமிழ் மக்களின் பிரச்சனைகள் பயங்கரவாதமாகக் காட்டப்பட்டு அதன் மூலம் தனது கொடூர அடக்குமுறையை நியாயப்படுத்த முயலும் சந்திரிகா அரசு அதில் கணிசமான வெற்றி கண்டுள்ளதாகவே அவதானிகள் கருதுகின்றனர். ஆனால் கொழும்பிலேயே அரசிற்கெதிராக நடாத்தப்பட்ட ஊர்வலம் உணர்ச்சி பூர்வமானதாக அமைந்துள்ளது. தமது பிள்ளைகள் கைது செய்யப்படுவது குறித்து எதிர்ப்புத் தெரிவிக்கும் பெற்றோரின் குரல்களே அங்கு ஓங்கி ஒலித்திருக்கின்றன. இதேவேளை கிழக்கிலும் கண்டன ஊர்வலங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

நம்பிக்கை. நாணயம், உத்தரவாதத்துக்கு நாடவேண்டிய
ஒரே பணமாற்று நிறுவனம்

RAFFLES EXCHANGE COMPANY

No commission Money Changes

Branches at: Sri Lanka, India, Singapore, Malasiya, HongKong, Dubai, Paris, Germany, Norway, Swiss, Canada and USA.

318, Earls Court Road, London SW5 9BQ
94, Mitcham Road, Tooting SW17 9NG

Tel: 0181-682 1216. 0181 767 7808
Mobile: 0802 75 73 92

படிப்பகம்